# வேரும் விழுதும்

## நினைவேந்தல் மலர்



அமரர் அருளம்பலம் ரீச்சர்
நினைவாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் அருளம்பலம் ஞானசௌந்தரி

*25.07.1937 – 13.05.2022*

## திதி வெண்பா

ஆண்டு சுபகிருதில் அஸ்தவிண்மீன் சித்திரையில்
வேண்டும் துவாதசி வெள்ளியாம் முப்பதில்
நீண்ட புகழின் நிறைஞான சௌந்தரி
ஆண்டவனில் சேர்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை குறிப்பு

*25.07.1937 :* மத்தியாஸ் கிளாரம்மா தம்பதிகளுக்கு மூன்றாவது மகளாக வீமன்காமம், தெல்லிப்பளையில் பிறந்தார். இவரின் சகோதரர்கள் லோரன்ஸ், தேவசகாயம், ரோசாமலர் அகிநேசம், ராசேந்திரம், அன் ரன் ஜெகநாதன் ஆவார்கள்.

*1942 –1957 :* காங்கேசன்துறை அமெரிக்கன் மிசன் ஆங்கிலப் பாட சாலையில் ஆரம்பக் கல்வியையும் மேல்நிலைக் கல்வியையும் பயின் றார்.

*1957 – 1961 :* சிலாபம் திருக் குடும்பக் கன்னியர் மடப் பாடசாலையில் முதலாவது ஆசிரியர் நியமனம் தனது 20 வயதில் பெற்றார்.

*1961– 1962 :* கொழும்புத் துறை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றார்.

*1962–1963 :* யாழ் வலைப்பாடு ரோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமை புரிந்தார்.

*1963 – 1965 :* கிளிநொச்சி புனித தெரேசா பெண்கள் பாடசாலையில் ஆசிரியராகக் கடமை புரிந்தார்.

*1965 – 1966 :* மல்லாவி 4 ஆம் யூனிட் அரசினர் தமிழ் கலவன் பாட சாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

*01.06.1966 –* நெடுந்தீவைப் பூர்விகமாகக் கொண்டு கிளிநொச்சி உருத் திரபுரத்தில் வாழ்ந்து வந்த திரு. அருளம்பலம் முருகேசு அவர்களை விரும்பித் திருமணம் செய்தார்.

*1966 – 1972:* வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி புரிந்தார். இக் கால கட்டத்தில் ஜெயசீலன், ஜெயக்குமார் என்ற இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தனர்.

*1973 – 1978:* உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந் தார். இக்காலத்தில் ஜெயஸ்ரீ என்ற பெண் பிள்ளை பிறந்தார்.

*1978:* கிளிநொச்சி சென் தெரேசா பெண்கள் பாடசாலையில் ஆசிரியர் பணி புரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1979 – 1986 :* சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இறுதியாகக் கடமை புரிந்தார்.

*1986– 1989:* இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து திருச்சி, சென்னை போன்ற இடங்களில் வாழ்ந்தார்.

*1992 – 2004 :* பிரான்சில் சேர்ஜி, பொபினி போன்ற இடங்களில் குடும் பத்துடன் வசித்தார். இக்கால வேளையில் மூன்று பிள்ளைகளின் திருமணங்களும் நடந்தன.

*2004 – 2007* – தாய்நாடு திரும்பி உருத்திரபுரத்தில் வசித்தார். இவ்வேளை களில் இரண்டு பேரப் பிள்ளைகள் பிறந்தனர்.

*2007 – 2018 :* இங்கிலாந்தில் கொவன்றி, ரக்பி எனும் இடங்களில் வசித்தார். இக்காலங்களில் நான்கு பேரப் பிள்ளைகள் பிறந்தனர்.

*2018–2022 :* தன் சொந்த மண்ணுக்கு திரும்பி உருத்திரபுரத்தில் வசித்து வந்தார்.

*13.05.2022 :* ஆண்டவனுள் ஐக்கியமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வாழ்க்கைத் துணை

இருமனம் இணைந்து ஒருமனதாகி திருமண பந்தத்தில் **1.6.1966**ல் கலந்த நாள். அக்காலத்தில் நாங்கள் மல்லாவி 4ம் யூனிற் அ.த.க. பாடசாலையில் கடமையாற்றினோம். கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.க.பொ.இரத்தினம் அவர்கள் என்னை அழைத்து வன்னேரிக்குளம் ம.வியில் 4ம் ஆண்டுக்குக் கீழ் உள்ள பெண் பிள்ளைகளை பெற்றோர் பாடசாலைக்கு விடாது தடுத்துள்ள னர் என்றும், அங்கு பெண் ஆசிரியர் எவரும் இல்லை என்றும் அங்கு போவதற்கு எவரும் முன்வருவதற்கு அஞ்சுவதாகவும் கூறினார். என்னையும் என் மனைவியையும் அங்கு போகும்படி அன்புக் கட்டளை யிட்டார். என்தாய் வழி உறவினர் பலர் அவ்வூரில் வாழ்ந்த தால் உடனே அங்கு சென்றோம். நான் ஒரு வருடத்தில் ஆசிரியர் கலாசாலைக்குச் செல்ல ஏழு வருடங்கள் அவ்வூரில் என் துணைவியார் மகிழ்வுடன் பணி செய்ய முடிந்தது. க.பொ.த. சாதாரண தரம் வரை அப்பாடசாலையில் மாணவ மாணவிகள் கல்வி கற்றனர். தற்போது பலர் அரச சேவையில் பணியாற்றுகின்றனர்.

பாடசாலையில் சைவசமய விழாக்கள் அனைத்தும் குறைவின்றி நடந்தன. என் மனைவி றோமன் கத்தோலிக்க மதம் சார்ந்தவராக இருந்தும் தைப்பொங்கல் விழா, சரஸ்வதி பூசை போன்றவற்றை எம் வீட்டிலும் பாடசாலையிலும் திறம்படச் செய்வதை நான் கண்டிருக் கின்றேன். கீழ் வகுப்பு மாணவருக்குச் சைவ சமயப் பாடநூல் துணை கொண்டு சைவ நெறி கற்பித்துள்ளார். எங்கள் இருவருக் கிடையில் சமயம் சம்பந்தமான எந்த முரண்பாடும் எம் வாழ்நாளில் ஏற்பட்டது கிடையாது. இன, மத நல்லிணக்கம் எங்களிருவரிடமும் நறைவாக வுள்ளதால் வாழ்நாளில் முரண்பாடெதுவும் தோன்றியதில்லை. சகிப் புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, எதையும் ஆய்ந்தறியும் திறனும், விவேக மும் இருந்தால் குடும்பத்தில் முரண்பாடுகள் தோன்ற இடமில்லை. இது என் பட்டறிவு.

ஒரு ஆசிரியரைக் கொண்ட பாடசாலையாக சிவநகர் அ.த.க பாடசாலை நீண்டகாலமாக ஒரு பாலைமரத்தின் நிழலில் கிராம முன்னேற்றச் சங்க மிகச்சிறிய கட்டடத்தின் கீழே பல ஆண்டுகள் இயங்கியது. அப் பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றினார். இருதரம் சிவநகர் அ.த.க. பாடசாலையிலும், இருமுறை உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலும் இரு தரம் கிளிநொச்சி சென் தெரேசா மகளிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியிலும் பணிசெய்து ஈற்றில் சிவநகர் அ.த.க. பாடசாலையில் இருந்து ஓய்வுபெற்றார்.

நான் 1981 தை மாதம் நாட்டைவிட்டு வெளியேறிப் பிரான்ஸ் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். எனக்கு அங்கு நிரந்தர வதிவுரிமை கிடைக்க நீண்டகாலம் எடுத்தது. அதனால் என் துணையாள் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு இந்தியாவுக்கு வந்து தமிழ்நாட்டில் திருச்சியில் தங்கினார்கள். அங்கும் பிள்ளைகள் கல்வியை மேற்கொண்டு தொடர அங்கு ஏற்பாடு செய்தார். எனது மூத்த மகனும் எனது ஒரு சகோதரனும் சில காலத்தின் பின்னர் பிரான்ஸ் நாட்டுக்கு வந்துசேர்ந்தனர். அதன் பின்னர் எனக்கும் மூத்த மகனுக்கும் பிரான்ஸ் நாட்டு வதிவிட உரிமை கிடைத்தது. அதனால் என் மனைவிக்கும் அடுத்த இரு பிள்ளைகளுக்கும் நிரந்தர வதிவிட உரிமை கிடைத்து பிரான்ஸ் வந்து சேர்ந்தனர்.

அக்காலகட்டத்தில் தமிழ் ஆர்வலர்களை ஒன்றிணைத்து எம் தாய் மொழி தமிழை அடுத்த தலைமுறையினருக்கு கற்பிப்பதற்கான ஏற் பாட்டினை மேற்கொண்டனர். பிரான்சின் பல பகுதிகளில் தமிழர் செறிந்து வாழும் இடங்கள் தோறும் தமிழை கற்பிப்பதற்கான பாட சாலைகளை ஆரம்பித்தனர். அதற்குத் தகுதியான தமிழாசிரியர்களைத் தேடித் தெரிவு செய்தனர். தமிழ் ஒருங்கிணைப்புக் குழுவினர் அவ்வாறு தேர்ந்தெடுக் கப்பட்டவர்களில் திருமதி ஞானசவுந்தரியும் ஒருவர். அந் தந்த நாடுகளில் பிறந்து வளரும் நம் சிறார்களுக்கு எமது தாய்மொழி, தமிழை கற்பிக்கத் தொடங்கினார். பேச்சுத்திறன் போட்டி எழுத்துத் திறன் போட்டி, மனனப்போட்டிகளை ஆண்டுதோறும் வைத்து பரி சில்கள் வழங்கி ஊக்குவித்தனர். முதல் பரிசு பெறும் பிள்ளைக்கு தங்கப் பதக்கமும் அடுத்த பரிசில்கள் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுப் பொருட்கள் கொடுத்து தமிழ் மொழியைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவித்தனர். இம் மாணவர்களை வழிப்படுத்தியவர்களில் ஞான சௌந்தரியும் ஒருவர். அப்படித் தமிழ் மொழியில் தேறிய மாண வர்களில் பலர் அடுத்த சந்ததித் தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழ் மொழி யைக் கற்பிக்கும் ஆற்றலு டன் செயற்படுகின்றனர்.

எனது மகள் பிரான்ஸ் மொழியைப் படித்து பல்கலைக்கழகம் செல்லக் கூடிய பருவம் வரும் பொழுது அவர் பிரித்தானியா சென்று மூத்த சகோதரனின் வழிகாட்டலில் லெய்ஸ்ரர் பல்கலைக்கழகத்தில் கணக் கியல் துறையில் பீ.ஏ. பட்டம் பெற்று வெளியேறினார். அதன் பின் னர் இலங்கைக்குச் சென்று 3 வருடங்கள் “யுனிசெவ்”அமைப்பில் கிளிநொச்சிச் செயலகத்தில் 2009ம் ஆண்டு நடுப்பகுதி வரை பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றி நாட்டின் நெருக்கடி நிலையால் பிரித்தானியா சென்றுவிட்டார். அங்கு அவர் தமிழ் மொழியில் பீ.ஏ., எம்.ஏ. பட்டங்கள் பெற்றுக் கொண்டார். இக் கல்வித் திட்டமானது தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களின் வெளிவாரிப் பட்டப்படிப்புகளாகும். பிரித்தானியாவில் குடியேறிய தமிழ் ஆர்வம் உள்ள தகுதி படைத்த பலர் இப் பட்டப் படிப்புகளை மேற்கொள்கின்றனர்.

எமது இரண்டாவது மகன் நாங்கள் பிரான்ஸ் நாட்டில் இருந்த காலத்தே வியாபாரத்தில் நாட்டம் கொண்டு அத்தொழிலினை செய்து வரு கின்றார். அந்தத் துறை அவருக்கு கைகொடுப்பதால் அவர் பிரான்ஸ் நாட்டிலே தொழில்களை விரிவுபடுத்தி வருகிறார்.

எமது மூத்த மகன் பிரான்ஸ் வதிவிட உரிமை கிடைத்ததும் பிரித்தானியா வுக்கு வந்து ஏ.எல்.படித்து பிரித்தானியாவின் வட பகுதியில் நியூகாஸ்ரல் பல்கலைக்கழகத்தில் பொறியியலாளர் பகுதியைத் தெரிவு செய்தார். அதில் கப்பல் கட்டுவதற்கான வடிவமைப்பையும் அதற்கான இயந்திர வடிவமைப்புகள் பற்றியதான படிப்பை மேற்கொண்டு அதில் M.Eng (Hons) பட்டத்தினைப் பெற்று அமெரிக்கன் கம்பனி ஒன்றில் வேலை செய்தார். அங்கு சில காலங்கள் வேலை செய்தார். இப்பொழுது தனியே தொழில் செய்து வருகின்றார்.

எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும், அவர்களின் தொழில் வளர்ச்சியிலும் அவர்களின் தாய்க்குப் பெரும் பங்குண்டு. அவர் உயிர் பிரியும் தருணத்தில் மூன்று பிள்ளைகளும் அருகே இருந்தார்கள். அவர்களின் நேரடிப் பார்வையிலிருந்த வேளை அவரது உயிர் பிரிந்தது எனக்கு நிறைவைத் தந்தது. பிறப்பும் இறப்பும் அனைவருக்கும் உரித்தானதே. அவரின் ஆன்மா சாந்தியும் அமைதியும் பெற இறையருள் வேண்டுகிறோம்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

அன்புக் கணவர்
**அருளம்பலம் முருகேசு**
கிளிநொச்சி, உருத்திரபுரம்
***10.06.2022***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை உருவாக்கிய சிற்பி

ஐந்து வருடங்களுக்குப் பிறகு பிறந்த முதல் குழந்தை என்பதால் என்னை மிக விசேடமாக வளர்த்தீர்கள் அம்மா.

இவ்வுலகில் என்னை ஒரு சிறந்த மனிதனாக உருவாக்கிய சிற்பி நீங்கள்தான் அம்மா.

நீங்கள் எனது அம்மா மட்டும் அல்ல, எனது முதல் ஆசிரியையும் கூட. சிவநகர் பாடசாலையில் எனது ஆரம்பக் கல்வியைப் பாலை மரத்துக்குக் கீழ் உங்களிடம் நான் படித்தது என் கண்முன் இன்றும் வருகிறது. அதே போல் எமது ஊரில் உள்ள நிறைய உறவுகளுக்கும் கூட ஞாபகம் வரும்.

பாசமான அம்மாவாக இருக்கும் நீங்கள் படிப்பு என்று வந்து விட்டால் கண்டிப்பான ஆசிரியையாக மாறி விடுவீர்கள். உங்களின் கண்டிப்பான வளர்ப்புத் தான் எங்கள் மூவரையும் அனைத்து நிலைகளிலும் மேல் நிலைப்படுத்தி வாழ வைக்கின்றது.

எந்த ஒரு வேலையையும் "நாளை, மறுநாள் என்று தள்ளிப் போடாதே. நினைத்தவுடன் செய்ய வேண்டும். ஆறின கஞ்சி பழங்கஞ்சி" என்று அடிக்கடி சொல்லுவீர்கள். எதையும் திட்டமிட்டு முன் கூட்டியே செய்யத் தொடங்குவீர்கள்.

"செய்வன திருந்தச் செய்" என்பதில் மிகவும் கண்டிப்பாக இருப்பீர்கள்.

"ஒரு வேலையைச் செய்யாமல் விடுவதை விட செய்ய முயன்று தோற்றாலும் பரவாயில்லை" என்று அறிவுரை கூறுவீர்கள். பல் துறை வித்தகி அம்மா நீங்கள்... கற்பித்தல் கலை, தையல் கலை, பன்ன வேலை, விவசாயம், கட்டிட வேலை, மிருகங்கள் வளர்க்கும் கலை என்று உங்களின் தகைமை, உங்களின் வாழ்வு முறை நீண்டு கொண்டே போகும். உங்களின் அறிவுரையும் வழிகாட்டலும் தான் இன்றைய எனது பல வித்தியாசமான முயற்சிகளுக்கும், எனது படிப்புத் துறையில், நான் கண்டுபிடித்த புதிய கண்டு பிடிப்புகளுக்கும் கூட காரணமாக இருக்கின்றது அம்மா.

அதி தீவிரமான நாட்டுப் பற்றுள்ளவர் நீங்கள். பிரான்சிலும், பிரித்தானியாவிலும் இருக்கும் போது வெகுவாக எமது நாட்டுச் செய்தியைப் பார்ப்பீர்கள். சுதந்திரமான, சொந்த மண்ணில் இறக்க வேண்டும் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்நாள் கனவு. இன்று சொந்த மண்ணில் இறந்தாலும் கூட, உங்கள் கனவு நிறைவேறாமலே போனது என்பது எம் எல்லோருக்கும் வேதனையான விடையம்.

“எனது மூத்த பிள்ளை எடுத்த புடவை தான் இறுதி யாத்திரையில் கட்ட வேண்டும்” என்று சொல்லி, எட்டு வருடங்களுக்கு முன்பே நான் எடுத்துக் கொண்டு வந்து தந்த புடவையை இவ்வளவு காலமாகக் கவனமாக வைத்திருந்து உங்கள் இறுதி யாத்திரையிலும் அதை அணிந்து கொண்டீர்கள்.

நான் தொலைபேசியில் கதைத்தால் “என்னதான் என்றாலும் தாய்க்குத் தலைப் பிள்ளை அல்லவா?” என்று அன்போடு கூறுவீர்கள்.

“பாபு” என்று அன்புருகிக் கூப்பிடும் உங்கள் குரல் என்னோடு நின்று நிலைக்கின்றது.

எம்மை விட்டு நீங்கள் எங்கும் நீங்கவில்லை அம்மா.

எம் குடும்பத்தின் இறைவியாகி அன்று ஆட்சி செய்தது போல் இன்றும், என்றும் ஆட்சி செய்வீர்கள்.

இங்கனம்
உங்கள் மூத்த மகன்
**பாபு (ஜெயசீலன் அருளம்பலம்)**
கொவன்றி, பிரித்தானியா
*(15.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுயிர் அம்மாவே!

அம்மா அம்மா எந்தன் ஆருயிரே! என்பதற்கு ஏற்ப எனக்கு உயிர் கொடுத்தவளே! எமக்கு உங்கள் உதிரத்தைப் பாலாக்கி தந்தது மட்டு மன்றி உடல் உழைப்பால் நமக்கு உணவு ஊட்டி வளர்த்தீர்களே! நீங் கள் அதிகாலை எழுந்து சமைத்து, நமக்கான கடமைகளைச் செய்து முடித்து, அவசர அவசரமாக எம்மையும் இழுத்துக் கொண்டு பாட சாலை செல்வது இப்போதும் என் கண்முன்னே வந்து போகிறது அம்மா.

சிறுவயதில் அடிக்கடி எனக்கு வருத்தம் வந்து கொண்டிருந்ததால் நீங்கள் அதிகமாகவே என்னுடன் கஸ்டப்பட்டீர்கள். எல்லோரும் கூறு வது போல்" அம்மாவுக்கு சின்ன மகன் பபி என்றால் ஒரு தனிப்பாசம்" என்பது எமது ஊரும் உறவும் அறிந்த உண்மை.

அம்மா நீங்கள் நோயினால் எழுந்திருக்க முடியாமல் படுத்திருக்கும் போதும், நான் தொலைபேசியில் பேசினால் நீங்கள் கொஞ்சம் உசா ராக எழும்பி இருந்து கொண்டு "எப்படி இருக்கிறாய் பபி?" என்று கேட்கும் அந்த இனிய வார்த்தை என்னை நிலைகுலைய வைக்கிறது அம்மா. அம்மாவுக்கு வருத்தம் கடுமையாக இருக்கிறது என்று நான் ஓடி வந்தால் படுத்துக்கிடந்த நீங்கள் எழும்பி இருந்து என்னுடன் கதைப் பீர்கள். இறுதியான நாட்களில் கூட "பபியை வரச் சொல்லுங்கள்" என்று கூறினீர்கள். நான் வந்து அம்மா என்று அழைத்த போது என்னை கண் திறந்து பார்த்துவிட்டு பேசமுடியாது இருந்த போதும் உங்கள் கண்களில் வழிந்த நீரில் உங்கள் அளவு கடந்த பாசம் புரிந்ததம்மா.

இறுதியான நிமிடத்திலும் கூட நான் கொடுத்த நீரை அருந்தி விட்டு அருகிலேயே நான் நிற்க எனக்கு ஒரு கூடச் வார்த்தை சொல்லாமல் அமைதியாக எம்மைமை விட்டுச் சென்று விட்டீர்கள் அம்மா. உங்க ளைப் பற்றி எழுதிவிட வார்த்தைகள் இல்லை அம்மா. இவ்வுலகில் நான் கண்ட தெய்வம் நீங்களம்மா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி!

உங்கள் அன்பு மகன்
**பபி (ஜெயக்குமார் அருளம்பலம்)**
சேர்ஜி, பிரான்சு (12.06.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு உயிர் தந்த அம்மா

உலகில் என்னைப் படைத்துக் காத்து மாண்புடன் வாழும் பாங்கை மண்ணில் தந்த அம்மா, நீங்கள் எழுத்தறிவித்த என் ஆசானான இறைவன். கம்பீரத்தை மூச்சிலும் பேச்சிலும் நடையிலும் உடையிலும் எனக்கு காட்டித் தந்த முன்னுதாரணத் தலைவி. இருப்பதை கொடுக்கும் இனிய மனத்துடையாள் என் அம்மா. கலகலவென பேசிப் பழகும் நீங்கள் ஊர் மக்களை அதுவும் உருத்திரபுர மக்களை உயிரின் உறவாய் நேசித்தீர்கள்.

விருந்தினரை விரும்பி உபசரிக்கும் பண்பும், நள பாகத்தை நயமாகக் காட்டும் இயல்புடையவர் நீங்கள். வீட்டுக்கு வந்தவர்களை "சாப்பிட்டு விட்டுத்தான் நீங்கள் போக வேண்டும்" என்ற அன்புக் கட்டளை என் அம்மாவின் வாயிலிருந்து எப்போதும் வரும்.

தொண்ணூறுகளில் நீங்கள் பிரான்ஸ் சென்ற பின்பு எமது மொழியை குழந்தைகளுக்குப் புகட்டப் பெரிதும் பாடுபட்டீர்கள். "பிள்ளைகள் தமிழ் படியுங்கோ. தமிழ் கதையுங்கோ. தாய் மொழி தெரியாமல் இருக்கக் கூடாது. தாய்மொழி தெரியாதவன் குப்பைக்கு சமம்" என்று அடிக்கடி நேர்படக் கூறுவீர்கள்.

புலம் பெயர்ந்த குழந்தைகளுக்கு இதன் அடிப்படையிலான ஒரு உண்மைக் கதையை (இந்த மலரில் இணைக்கப் பட்டுள்ளது)அடிக்கடி கூறுவீர்கள். அந்தக் கதையை பிரித்தானியாவில் வசிக்கும் குழந்தைகளுக்கு கூறுவதற்கும் நாடகம் ஆக்குவதற்கும் நான் முயன்று கொண்டிருக்கிறேன் அம்மா. உங்களது தமிழ் கற்றுக்கொடுக்கும் சேவை மனப்பான்மையையும் என்னுள் வரித்துக் கொண்டேன்.

இயற்கையை ரசித்து இனிமையாக மிருகங்களுடன் பேசி அவற்றை வளர்த்தீர்கள். தாங்கள் பாடசாலை விட்டு வந்ததும் எமது வளவில் இருக்கும் மரங்களை வளர்ப்பதற்காக இரவானாலும் நீண்ட நேரம் இலாம்பை வைத்துக் கொண்டு அவற்றுக்கு தண்ணீர் பாய்ச்சுவீர்கள். எங்கள் வீட்டு ஒவ் வொரு மரமும் ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு அசைவும், ஒவ் வொரு நினைவும், உங்கள் பெயர் சொல்லும். மதங்கள் கடந்து வாழ்ந்த உன்னத சிந்தனையாளர் நீங்கள். பொதுத் தொண்டு செய் வதில் அலாதிப் பிரியம் அதை நாம் தொடர்ந்து செய்ய உங்கள் உந்து சக்தியே வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் வீட்டில் பிள்ளைகளே இருப்பதாகத் தெரியவில்லை" என்று ஊரார்கள் கூறுவார்கள். அப்படி எம் மூவரையும் கண்ணியம், கட்டுப் பாடு என்று அழகுற வளர்த்தீர்கள். அது போலவே உங்கள் பேரப் பிள்ளைகளையும் வளர்த்து மன நிறைவு கண்டீர்கள். ஒரு பெண் பிள்ளை என்பதால் பெயர் சொல்லிக் கூப்பிட மாட்டோம் என்று கூறி "பிள்ளை" இல்லையென்றால் "தங்கச்சி" என்று அன்பு பொங்க வாஞ்சையோடு என்னை அழைத்த உயிரில் உறையும் உங்கள் குரல் என்னை சுற்றிச் சுற்றி நின்று அழைக்கின்றது.

உங்கள் சுகயீனக் காலங்களில், "ஒவ்வொரு முறையும் மகள் வந் தால் டீச்சர் எழும்பி இருப்பார்" என்று எமது உற்றார் உறவினர்கள் கூறுவார்கள். இந்த முறையும் அப்படித்தான் நினைத்தேன் அம்மா. என் நெஞ்சம் பொறுக்குதில்லை அம்மா.

பிரித்தானியாவில் இருந்து கடைசிப் பிள்ளையிடம் செல்கிறேன் என்று கூறி வந்து, என் சகோதரி புஸ்பாவை மனதார ஏற்று கடைசி வரை "புஸ்பா, புஸ்பா" என்றழைத்து, அவரின் பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளாக ஏற்று வாழ்ந்தீர்கள்.

"எதற்கும் அஞ்சாத ஆண் மகவு போல நீ இருக்க வேண்டும்" என்று என்னை வளர்த்த அன்னையே! என் முதல் ஆசானே! என் ஒரே ஒரு அழகியே! என் கவலைகளை, சந்தோசங்களைக் கொட்டும் நண்பியே! என் பிள்ளையே! அனைத்தும் ஆன தேவதையே! நீங்கள் என்னை விட்டு என்றும் நீங்கவில்லை. என்றும் என் மூச்சில் நிறைந் திருக்கின்றீர்கள். உங்கள் அனைத்துப் பண்புகளும் வாழ்வியல் முறை மைகளும் எனக்குக் கிடைத்த பாடங்கள். என் வாழ்நாளில் நான் கடைப்பிடிக்க வேண்டிய பொக்கிசங்கள். நமது குழந்தைகளுக்கு நாம் கொடுக்க வேண்டிய சொத்துக்கள். உங்கள் நினைவுகள் அருவி மழை போல இங்கு கொட்டுகின்றன. அவற்றை எல்லாம் எழுதி விட இந்த ஒரு நூல் போதாது, என்பதால் முடித்துவிட முனைகின்றேன்.

உங்கள் நினைவுகள், உயரிய கொள்கைகள், என்றும் தொடர்ச்சியும் மீட்சியுமாய் எம் வாழ்வில் தொடரும். எம் உயிர்த் தெய்வமாக எம் எஞ்சிய வாழ்வை நீங்கள் வழி நடத்துவீர்கள் என் அம்மாவே. என்றும் நீக்கமற நிறைந்திருக்கும் ஒளியாகத் திகழ்வீர்கள்.

*உங்கள் உயிர்ப் பிள்ளை*
***ஜெயஸ்ரீ சதானந்தன்***
*றக்பி, பிரித்தானியா*
***18.06.2022***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சதானந்தர்" என்று என்னை அழைக்கும் மாமி

மரியாதையாக என்றும் சதானந்தன் என்று கூறாமல் "சதானந்தர்" என்று சொல்லியே என்னைப் பற்றி யாருடனும் கதைப்பீர்கள். "தம்பி" என்று என்னை அன்பாகக் கூப்பிடும் மாமி எனக்கு இன்னொரு அம்மாவாக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்திருக்கின்றீர்கள். மிகவும் சுவையாக நிறைய நேரம் எடுத்து எனக்குச் சமைத்துத் தருவீர்கள். என்னைக் கண்டாலே முருங்கைக்காயும் இறாலும் சேர்த்து கறி சமைத்துத் தருவிர்கள். வருத்தமாக இருந்த வேளையிலும் "சதானந் தருக்கு சாப்பாடு கொடு. தம்பி சாப்பிட்டு விட்டுத் தான் நீங்கள் போக வேண்டும்" என்று கடைசி வரை கூறுவீர்கள். உங்கள் கம்பீரமான தொனி என்னை மிகவும் ஈர்க்கும். "எனது மருமகன் ஒரு வைத்தியர்" என்று எல்லோரிடமும் நீங்கள் பெருமையாகச் சொல்வதை நான் கேட்பதுண்டு.

எமது குழந்தைகள் செய்யும் குறும்புத் தனத்துக்காக நான் அடிக்க வந்தால், அவர்கள் உங்களது அறைக்குள் ஓடி வருவார்கள். அவர் களை அப்படியே அணைத்துக் கொள்வீர்கள். "தம்பி இன்றைக்கு மட்டும் அடிக்காதீங்கோ." என்று எப்போதும் சொல்வீர்கள். நீங்கள் ஊருக்குத் திரும்பியதும் ஓவியன் இதைக் கூறியே "அம்மம்மா இங்கே இல்லையே" என்று எப்போதும் கவலைப் படுவதுண்டு.

"மாமி" என்று உங்களை நான் அழைப்பதில்லை என்று கவலையாக நீங்கள் இறுதிக் காலங்களில் கூறியதாகக் கேள்விப்பட்டேன். சென்று வாருங்கள் மாமி. உங்களின் நிறை ஆசியால், நீங்கள் எண் ணியது போலவே உங்கள் அனைத்துப் பேரக்குழந்தைகளும் வளர்வார்கள்.

நன்றி

**சதானந்தன் இரத்தினம்**
றக்பி, பிரித்தானியா
***18.06.2022***

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு மிக்க மாமி

ஒவ்வொரு பெண்ணுக்கும் அவளின் வாழ்க்கையில் திருமணமும் அதன் மூலம் கிடைக்கும் புகுந்த வீட்டு உறவுகளும் மிகவும் முக்கிய மானது. பிறந்த வீட்டில் கிடைத்த பாசமும் சந்தோசமும் நிம்மதியும் புகுந்த வீட்டிலும் கிடைத்தால் அப்பெண் மிகவும் பாக்கியம் செய்தவள் ஆகின்றாள். அப்படியான பாக்கியத்தை எனக்குத் தந்தவர் எனது மதிப்பு மிக்க மாமி.

உங்கள் மகளைப் போலவே வீட்டில் வாழ வந்த மருமகள்களையும் பாசமாக நீங்கள் பார்த்தீர்கள் என்பதை உங்களுடன் வாழ்ந்த இந்த 20 வருடங்களில் பல சந்தர்ப்பங்களில் நான் உணர்ந்திருக்கின்றேன். எனது சமையல் கலையின் குரு என்றே உங்களைச் சொல்லலாம். சமைப்பதை ஒரு சாதாரண விடயமாகப் பார்த்த எனக்கு அதை ஒரு கலையாக எப்படிச் செய்ய வேண்டும் என்று பழக்கியவர் நீங்கள். பல சமையல் குறிப்புகளை தொலைபேசி மூலம் சொல்லித் தருவ தோடு மட்டுமல்லாது உங்கள் கைபட எழுத்தின் மூலம் எனக்கு எழுதி அனுபுவீர்கள். நீங்கள் சமையல் செய்வதை எப்பொழுதும் ஆசையாகப் பார்த்துக் கொண்டு நிற்பேன். இப்படியான பல ஆயிரம் நிகழ்வுகள் ஒவ்வொரு நிமிடமும் உங்களை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். உங்களுடைய மருமகள் என்று சொல்வதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

எமது வாழ்வில் அனைத்து நேரங்களிலும் உங்கள் ஆசிகளை வழங்கிக் கொண்டு எம்மோடு இருப்பீர்கள் மாமி.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மூத்த மருமகள்
**சத்யகௌரி ஜெயசீலன்**
கொவன்றி, இங்கிலாந்து
*16.06.2022*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலை போல் உயர்ந்த மாமி

மலைபோல் உயர்ந்தீர்கள். மலர் போல் மலர்ந்தீர்கள். தாய் போல் அணைத்தீர்கள். தாயகம் போய் வாழ்ந்தீர்கள். உறவணைத்து மகிழ்ந் தீர்கள். அத்தனையும் அறிந்தீர்கள். இன்முகம் காட்டி எம்மை இன்புற வைத்த உங்களை இழந்து நாம் கலங்கி நிற்கின்றோம்.

ஒளிவீசும் உங்கள் முகம் ஒரு நாளும் நாம் மறவோம் மாமி. ஓங்கி நிற்கின்ற பெருமரமாய் ஓசையின்றி சாய்ந்தீர்களே!இறையடி சேர்வது இயல்பானதென்றெண்ணி உங்கள் ஆத்மா அமைதி பெற நாங்கள் இறையருள் வேண்டுகிறோம் மாமி.

அன்புடன்
**மருமகள் மயூரா ஜெயக்குமார்**
சேர்ஜி, பிரான்ஸ்
*17.06.2022*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை உயிர் உருக அழைக்கும் அம்மம்மா.

"பிள்ளை" என்று உயிர் உருக அழைக்கும் என் அம்மம்மா.
குழந்தையில் இருந்து என்னைப் பக்குவமாய் நாளும் பார்த்துப் பார்த்து வளர்த்தீர்கள். எழுத்தறிவித்து அழகாக உறுப்பமைய எழுத வைத்தீர்கள். எம் பண்பாடு, படிப்பு எல்லாம் சொல்லித் தருவீர்கள். நிறையத் தேவாரங்களைப் பாடமாக்க வைத்து, இரவில் உங்கள் அருகில் தேவாரம் பாடவைத்த பின்பே ஒவ்வொரு நாளும் படுக்க வைத்தீர்கள்.

"சிறிய வயதில் உயிரியல் பாடத்தில் நான் மிகவும் கெட்டிக்காரி" என்று உங்களின் திறமையைக் கூறி, என்றும் நானும் அதை விரும்பிப் படிக்க எனை ஊக்குவித்தீர்கள். "நல்லாப் படி பிள்ளை, நல்லாப் படிக்க வேணும்" இதுதான் என் அம்மம்மா எனக்கு மட்டுமல்ல, காண்கின்ற அனைத்துப் பிள்ளைகளுக்கும் சொல்லும் அறிவுரை.

மிகவும் சுவையாக எமக்கு சமைத்துத் தருவீர்கள். அடிக்கடி என் அம்மாவுக்கு நீங்கள் கூறும் வசனம் "நீ மட்டும தான் இலக்கியா எனது உயிர்" என்பீர்கள். என் வாழ்வில் பார்த்த மிகவும் கம்பீரமான பெண் நீங்கள். நேர்படப் பேசும் திடம் கொண்டவர் நீங்கள். நல்ல விடயங்கள் செய்வதில் விடாப்பிடியாக நிற்பீர்கள் அம்மம்மா.
எனது வாழ்வின் உதாரணத் தேவதை நீங்கள். கொடுப்பதில் விருப்பம் கொண்ட நீங்கள் பேரப்பிள்ளைகளான எங்களுக்கும் அந்தப் பண்பினைச் சொல்லித் தந்தீர்கள்.

நீங்கள் சொல்லித் தந்த பண்புகள், வாழ்ந்த முறை, உங்கள் செயல்கள் அனைத்தையும் என் வாழ்வுக்கான பாடங்களாக எடுக்கின்றேன் அம்மம்மா.
என்னைச் சுற்றி எனக்காக என்றும் என் வாழ்வில் இருந்தீர்கள், இருப்பீர்கள் அம்மம்மா.

இலக்கியா சதானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம்மா.

அன்பின் திருவுருவாய் இருந்து என்னை அரவணைத்த அப்பம்மாவே! நீங்கள் இறந்த செய்தி கேட்டு என்னால் தாங்க முடியவில்லை. எனக்கு அகரம் எழுத்துத் தொடக்கியது நீங்கள் தான். என்னுடன் தொலைபேசியில் கதைக்கும் போது "அட்சயன் நான் தான் உனக்கு ஏடு தொடக்கி விட்டனான் நீ நல்லாய் படிச்சு டொக்டராக வர வேண்டும்" என்று கூறும் வார்த்தை இப்போதும் என் காதுகளில் ஒலிக்கிறது. அப்பம்மா நீங்கள் கூறியதை நான் நிறைவேற்றுவேன். நான் சின்னப்பிள்ளையாக இருக்கும் போது எனக்கு சொல்லிக் கொடுக்கும் பாடல்களான "கீயாக் கீயாக் கிளி நாலோ, ஆட்டுக் குட்டி எங்கள் குட்டி, Baba Black Sheep" எல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவுகள் எல்லாம் என்றும் என்னுடன் வாழ்ந்து கொண்டிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி

அன்புப் பேரன்
ஜெயக்குமார் அட்சயன்



## எனக்கு ஏடு தொடக்கிய ஆசான் என் அம்மம்மா

குழந்தையில் இருந்து கொஞ்சி வளர்த்த என் அம்மம்மா. எண்ணும் எழுத்தும் கண்ணெனச் சொல்லித் தந்தீர்கள். தாய்மொழி சொல்லித் தந்து, வாய்ப்பாடு பாடமாக்க வைத்து, கணிதம் சொல்லித் தந்து, வீட்டுப் பாடம் செய்வதற்கு எப்போதும் உதவி செய்வீர்கள். பென்சில் சரியாகப் பிடிக்கப் பழக்கி, நான் அழகாக ஆங்கிலமும் தமிழும் எழுதுவதற்கும் முயற்சி செய்தீர்கள். தேவாரங்கள் பாடமாக்க வைத்து என்னைப் பாட வைப்பீர்கள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நானும் நீங்களும் சேர்ந்து பார்ப்பது எனக்குக் கண் முன் வருகிறது. உங்களின் சுவையான சமையல் எனக்கு எப்போதும் பிடிக்கும் அம்மம்மா. நீங்கள் சமைக்கும் கீரைக்கறி எனக்கு மிகவும் நன்றாக பிடிக்கும் அம்மம்மா.

அம்மம்மா நீங்கள் அவ்வளவு நல்லவர். எவ்வளவு என்று சொல்லில் அடங்காது. "ஜெவிக்குஞ்சு" என்ற பாசத்தோடு என்னை சுற்றிச் சுற்றி வருகிறது அம்மம்மா.

" ஜெவிக்குஞ்சு இங்கை வா. டிவி வேலை செய்யவில்லை பார்.. பற்றறி மாற்றித் தா" என்று எல்லாவற்றுக்கும் என்னைக் கூப்பிடும் அம்மம்மா, என்னோடு என்றும் இருக்கின்றீர்கள். உங்கள் கூப்பிடல், உங்கள் வாழ்வு, உங்கள் பண்புகள் எல்லாவற்றையும் என் வாழ்வில் எடுக்கின்றேன் அம்மம்மா. எங்களுக்காக வாழ்ந்த அம்மம்மா என்றும் என்னுள் நிறைந்து வாழ்வீர்கள்.

உங்கள் உயிருக்குயிரான
பேரன் ஜெவியன் சுதானந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம்மா

அப்பாவின் அம்மாவே – எங்கள்
அன்பான அப்பம்மாவே
அறிவில் ஆசானாய் – எமக்கு
அன்பின் அன்னையாய்
பண்பில் சிறந்தவராய் – எல்லோருக்கும்
பாசத்தில் உயர்ந்தவராய்
"ஆதி" என்று என்னை – நீங்கள்
அன்பாக அழைப்பீர்கள்
அப்பாவுடன் வந்த போது – என்னுடன்
ஆசைவார்த்தை பேசினீர்கள்
அடுத்த வருடம் வருவேன் – என்று கூற
அழகாய் தலையசைத்து நீயும் வா என்றீர்கள்
அதற்குள் தான் அவசரமாய்
ஆண்டவனிடம் சென்று விட்டீர்கள்.

அப்பம்மா உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

அன்புடன்
ஜெயக்குமார் ஆதி (ஆதித்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை பிடித்து எழுதப்பழக்கிய
எனது அப்பம்மா


"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது போல் எனக்கு கணக்கு கண்ணாக இருந்து படிப்புச்சொல்லித் தந்தீர்கள் அப்பம்மா. ஆரம்பத்தில் பென்சிலை நான் சரியாகப் பிடிக்கவில்லை எனக்கொண்டு எனது கை பிடித்து வடிவான எழுத்தாக எழுதப்பழக்கினீர்கள் எப்பொழுதும் எனது படிப்பில் கவனமாக இருப்பீர்கள். நீ நன்றாகப்படித்து உனது அப்பாவைப்போல் நல்ல வேலையில் சேரவேண்டும் என்று அடிக்கடி கூறுவீர்கள். எங்கள் எல்லோருக்காகவும் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாடுவீர்கள்.

எல்லோரும் சித்திரை வருடப்பிறப்பிற்கு கை விசேடம் கேட்பார்கள். ஆனால் நீங்கள் ஆங்கிலப் புத்தாண்டுக்கும் எங்கள் எல்லோருக்கும் கை விசேடம் தந்து எங்களை மகிழ்விப்பீர்கள். அப்பம்மா நீங்கள் ஆசைப்பட்டது போல நான் நன்றாகப் படித்து நல்ல வேலையில் சேர்ந்து சிறப்பாக வாழ உங்கள் ஆசி எப்பொழுதும் எனக்கு இருக்கும்.

அன்புடன் உங்கள் பேரன் இனியன்
(சேயோன் ஜெயசீலன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பான அப்பப்பாவே!

நீங்கள் எங்களை விட்டுச் சென்ற செய்தி கேட்டு எனக்கு கவலையாக இருக்கின்றது. நீங்கள் என்னை "ஆரு" என்று கூப்பிடுவது இல்லை "குட்டக் கறுவல்" என்று தான் கூப்பிடுவீர்கள். ஆனால் இப்போது வளர்ந்து விட்டேன்!

அப்பப்பா நீங்கள் என்னைப் பார்க்க ஆசைப்பட்டீர்கள். நாங்கள் இவ்வருடம் பார்க்க வரும் முன்பே நீங்கள் கடவுளுடன் சென்று விட்டீர்கள். அதுதான் கவலையாக இருக்கிறது. நீங்கள் அங்கு சந்தோசமாக இருங்கள். அப்பப்பா.......

ஓம் சாந்தி!

அன்புடன்
ஜெயகுமார் ஆரு (ஆரணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழை நேசித்த அன்னைக்கு வெண்பாவில் சமர்ப்பணம்.

# சிற்றிலக்கியம்

காப்புப் பாடல்

தித்திக்கும் நெஞ்சினாள் தீர்க்க குணமுடையாள்
எத்திக்கும் கற்பித்த என்றனின் தாயாரும்
அத்துணை யாகிவிடும் ஆதி இறைவனும்
மொத்தமாய் இங்கருள் வீர்.

## ஞானசௌந்தரி எனும் நதி

நதிபோல் பிறப்பாம் நனிபுகழ் ஞானம்
உதித்தனை தெல்லியூர் உத்தமி அன்று
மதிபோல்வர் சௌந்தரி மங்கையருள் மாண்பாம்
கதிரவன்போல் ஆசானைக் காண்

கண்ணுக் கினியாளாம் கம்பீரப் பெண்ணிவர்
மண்ணாம் சிலாபத்தில் மாண்புடன் கற்பித்தார்
வண்ணச் சிலையாள் வயதாம் இருபதில்
எண்ணமெலாம் சேவையென ஏற்று

ஏற்றம் பெற்றவர் எங்களின் அன்னையும்
மாற்றலு மாகியும் மல்லாவி வந்தவர்
ஆற்றிய சேவையால் அப்பாவைக் கைப்பிடித்துப்
போற்றிடும் ஆறானார் ஆங்கு

ஆங்கவர் ஊராரை அன்போடு கொண்டாடித்
தாங்கும் நதியாய்த் தரணியில் வாழ்ந்தபடி
பாங்குடன் வன்னேரி பாதம் பணிந்திட்டார்
வேங்கைக் குணத்தினள் வென்று

வெற்றி இவர்பல வென்று குவித்திட
பற்றுகள் பாசமும் பச்சைநிற வன்னியில்
உற்றார் உறவினர் ஊராரும் கொண்டாட
கற்பித்தார் பாடங் கவர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்திடும் மண்ணாய்க் கனிகள் நிறைவாய்
உவந்த இடமாம் உருத்தி ரபுரம்
தவமாய் விவசாயம் தாயாரும் செய்தார்
எவர்தான் மறப்பார் இதை

இதனுடன் நீங்கா இவரின் கதைகள்
மதங்கள் கடந்துந்தான் மண்ணிலும் வாழ்ந்தார்
இதமிலையா னாலும் இடம்பெயர்ந்து போனார்
நிதமும் நினைவுகளில் மண்

மண்ணாம் புலத்தில் மகிழ்ந்து தமிழையும்
கண்ணாய் பிரான்சில் கலாச்சாரம் தந்தனை
திண்ணமொடு மாணாக்கர் தீர்க்கமாய் செய்கின்றார்
வண்ணமாய் வம்ச வழி

வழியில் நதியாய் வளங்கள் கொடுத்தார்
கழித்தனை லண்டனில் கற்பித்து நாட்கள்
அழியாத செல்வமாம் அன்னைத் தமிழை
உழிஞையாய்க் காத்தார் உணர்

உணர்வுகள் நித்தம் உருத்தி ரபுரம்
மணந்தரும் மண்ணுக்கு மாதா திரும்பினார்
வணங்கும் உறவுகள் வாட உறைந்தார்
அணங்கிவர் ஓயா நதி.

ஆருயிர் மகள்
**ஜெயஸ்ரீ சதானந்தன்**
றக்பி, இங்கிலாந்து
*(18.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் பெற்ற பிள்ளையாக பார்த்த என் அம்மா

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு அமைய என்னுடைய உள்ளத்தில் நன்றி கூறும் தெய்வம் என் அம்மா.

என் அம்மாவாகிய நீங்கள் என்னைப் பெறா மகளாகப் பார்த்ததே இல்லை. நீங்கள் என்னைப் பெற்ற பிள்ளையாகத்தான் பார்த்தீர்கள். எனது அம்மா இல்லை என்ற குறையே எனக்குத் தெரிவதில்லை. அந்த அளவுக்கு என் மீது அன்பும் பாசமும் அரவணைப்பும் கொண்டீர்கள். சொத்துகள் பல தந்து சுகமாக என்னை அணைத்துக் கொண்டீர்கள். இங்கிலாந்தில் இருந்து வரும் பொழுது "எனது கடைசி மகளோடு கொஞ்ச நாள் இருந்து விட்டு வருகிறேன்" என்று சொல்லித் தான் இங்கு வந்தீர்கள். எனக்குத் தெய்வம் தந்த வரமாகவே நான் உங்களை நினைக்கின்றேன். அம்மா, நீங்கள் என்னைப் "பிள்ளை" என்று அன் போடு கூப்பிடுவது என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. என்னை "புஸ்பா" என்று அழைத்ததை விட நீங்கள் "குஷ்பு" என்று அடிக்கடி அழைத்தது என் நினைவில் வந்து நிழலாடுகிறது.

சில வேளைகளில் கோபம் வந்தாலும் நீங்கள் அடுத்த நிமிடம் "புஸ்பா" எனக் கூப்பிடுவீர்கள். அம்மா வீட்டில் இருப்பதால் நான் எங்கு போனாலும் ஓடி வந்து விடுவேன். மாலையானதும் நாங்கள் இருவரும் வெளியில் வந்து வீதியில் போவோர் வருவோரை பார்த்துப் பேசுவதும் அயலவரோடு அன்போடு பேசுவதும் "அடிக்கடி வாருங்கள்" என்பதும் "நிதியம், மல்லிகா (உங்களின் விருப்பத்துக்குரிய மாணவிகள்) ஒவ் வொரு நாளும் வாருங்கள்" என்று கூறுவதும் எனக்கு எப்பொழுதும் ஞாபகம் வருகிறது. நேரம் தவறாது உங்களைப் பராமரிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தது, ஆனால் இப்பொழுது எனக்கு ஏதோ ஒன்றும் இல்லாதது போல் இருக்கின்றது.

உங்களுக்கான வேலைகளை நான் செய்யாமல் இருக்கின்றேனே என்று என் மனம் இடைக்கிடை சொல்கிறது. இப்போது வெறுமையாக நாம் வாழும் வீடு உள்ளது அம்மா. நீங்கள் எங்கும் செல்லவில்லை. எம்முடன் இந்த வீட்டின் ஒவ்வொரு அசைவிலும் இருக்கின்றீர்கள்.

உங்களின் அன்புக் கடைசி மகள்
**புஸ்பா இலட்சுமணன்**
உருத்திரபுரம், கிளிநொச்சி (18.06.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வீட்டின் கதாநாயகி அம்மம்மா

சிறிய வயதில் எனக்குப் பாடம் சொல்லித் தந்தீர்கள் அம்மம்மா. அறிவுரை கூறுவதில் நல்ல ஆசானாகவும் அரவணைப்பில் தாயாகவும் இன்ப துன்பத்தில் தோழியாகவும் நெஞ்சுறுதி, வாக்குறுதி, பேச்சில் இனிமை, மனதில் தூய்மை காட்டி உடலாலும் மனதாலும் அன்பு செலுத்தினீர்கள். நேரம் தாழ்த்தாமை, உபசரிப்பு என்ற சொற்களின் அர்த்தத்தை காட்டிய எங்கள் வீட்டின் கதாநாயகி நீங்கள் அம்மம்மா.

எனது உடல் நலக்குறைவு நேரங்களில் அம்மாவிடம் "கவிதை நன்றாகப் பார்" என்பீர்கள். நீங்கள் என்றும் எம்மைச் சுற்றி இருப்பீர்கள் அம்மம்மா.

என்றும் உங்கள் பெறாமகள் வழிப் பேரன்
**கவிதரன் இலட்சுமணன்**
உருத்திரபுரம் கிளிநொச்சி *(18.06.2022)*

---

# அன்புக்கும் பண்புக்கும் உரிய அம்மம்மா

அன்புக்கும் பண்புக்கும் உரிய அம்மம்மாவே! எப்போதும் என்னைச் சிரித்து கொண்டே வரவேற்பீர்கள். "சாந்தன் என்பதால் சாந்தமான பிள்ளை" என்று என்னை அடிக்கடி அழைப்பீர்கள். பாடசாலையில் படிக்கும் போது பாடங்கள் சொல்லித் தருவீர்கள். நீங்கள் உடல் நலம் சரியில்லாமல் இருந்த வேளைகளில் உங்கள் அறைக்குள் ஒவ்வொரு முறை வரும்போதும் சிரித்துக் கொண்டு கூப்பிடுவீர்கள்.

இப்போது உங்கள் அறை பிரகாசமாக இல்லை அம்மம்மா. எனக்குக் கிடைத்த மிகப்பெரும் சொத்து நீங்கள் அம்மம்மா. கலங்குகிறோம். கண்ணீர்த் துளிகளை காணிக்கை ஆக்குகிறேன் அம்மம்மா.உங்கள் ஆத்மா எங்களோடு என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

என்றும் உங்கள் பெறாமகள் வழிப் பேரன்
**சாந்தன் இலட்சுமணன்**
உருத்திரபுரம், கிளிநொச்சி *(16.06.2022)*

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அள்ளிக் கொடுத்த அம்மம்மா

அள்ளிக் கொடுத்த அம்மம்மாவே! எப்பொழுதும் உங்கள் வாசல் தேடி வந்தாலும் முகம் கோணாமல் அன்னமிட்ட எங்கள் அம்மம்மா. நான் இங்கு வந்த போது எனக்கு ஐந்து வயது தான். நான் முன்பள்ளியில் படித்து விட்டு வரும் பொழுது என்னை அரவணைப்பீர்கள். நான் சின்னச் சின்ன குழப்படிகள் செய்தபோது என்னைக் கண்டித்து ஒழுக்கத்தோடு வளர்த்தீர்கள் அம்மம்மா. எனக்கு பிறந்தநாள் என்று வந்தால் எனக்கு உடைகள் வாங்குவதற்காக பணம் தந்து மகிழ்வீர்கள். உங்கள் அறைக்குள் வரும்போது "அம்மம்மா" என்று அழைத்தால் நீங்கள் என்னைச் சிரித்த முகத்துடன் "வா பிள்ளை" என்பீர்கள். உங்கள் பக்கத்தில் இருக்கச்சொல்லி கூறுவீர்கள். என்னால் அதை எப்பொழுதும் மறக்க முடியாது. பாசத்தோடு பழகிய அந்த அழகிய முகத்தை இந்தப் பொழுதில் இழந்து தவிக்கின்றோம். எங்கள் வீட்டின் முத்தாக வாழ்ந்தீர்கள் அம்மம்மா. என்றும் வாழ்வீர்கள் அம்மம்மா.

நீங்கள் இல்லை என்பதை ஏற்க என் மனம் மறுக்கிறது.

எங்களை உங்கள் பேரப் பிள்ளைகளாக ஏற்று பாசத்தோடு வாழ்ந்ததை என்றும் மறக்க முடியாது அம்மம்மா. என்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருப்பீர்கள் அம்மம்மா.

உங்கள் பெறாமகள் வழிப் பேத்தி
**கிரிசா இலட்சுமணன்**
உருத்திரபுரம், கிளிநொச்சி *(16.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்புப் பெரியம்மாவிற்கு ஒரு சில வார்த்தைகள்

எனது மிகச் சிறிய வயதில் நினைவு தெரிந்த நாள் முதல் நான் பார்த்து வந்த அன்பான முகம். கனிவான வார்த்தைகள். எனது சிறிய வயதில் தெல்லிப்பளையில் நமது அம்மம்மாவுடன் கூட்டுக் குடும்பமாக இருந்ததை ஒருபோதும் மறக்க முடியாது. நீங்கள் பெற்ற பிள்ளைகள் போலவே எம்மையும் அன்புடனும் பாசத்துடனும் வளர்த்தீர்கள் பெரியம்மா. சிறுவயதில் பாடசாலை விடுமுறை நாட்களில் உங்களின் வீட்டிற்கு வருதென்றால் எனக்கு ஒரே கொண்டாட்டமாக இருக்கும். உங்களின் வீடும் வளவும் பார்ப்பதற்கே மிகவும் அழகாக இருக்கும்.

அங்கு உங்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு நடந்ததை எண்ணிப் பார்க்கின்றேன். உங்களின் பிள்ளைகளான எனது அண்ணன்மார், அக்காவுடன் ஓடியாடி விளையாடியதையும் செய்த குறும்புத்தனங் களையும் மறக்க முடியாது. நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக உங்கள் குடும்பம் பிரிந்து வெளிநாடு சென்றாலும் உங்களின் நினைவு எப்போதும் என் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்தே இருந்தது. மீண்டும் எப்போது காண்போம் என்ற பேரவாவுடன் இருந்த வேளை யில், நீங்கள் இங்கு திரும்ப வந்ததையிட்டு மிகவும் மகிழ்ந்தேன். உங்களை ஒவ்வொரு தடவையும் வந்து பார்க்கும்போதும் பழைய நினைவுகள் என்னுள் மீண்டெழும். பெரியம்மா நீங்கள் சிறு வயதில் சென்று வந்த ஊரணி அந்தோனியார் தேவாலயம், நமது தெல்லிப் பளைக் கிராமம், நமது உறவினர்களைப் பற்றி மறக்காமல் கேட்பீர்கள். நீங்கள் நோய்வாய்ப்பட்டு உடம்பு முடியாமல் இருந்த வேளையிலும் அதே அன்புடனும் பாசத்துடனும் எம்மை நினைவில் வைத்திருந்து பேசுவதை மறக்கவே முடியாது.

இறுதியாக எம்மை விட்டுப் பிரிந்து சென்ற போதும் என் நெஞ்சில் மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் எனது அன்புப் பெரியம்மாவுக்கு எனது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறேன். உங்களை இழந்து தவிக்கும் அன்புப் பெரியப்பா, அண்ணன்மார், அண்ணிமார், அக்கா அத்தான், எனது பெறாமக்கள் அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து அன்புடன் வணங்குகிறேன்.

உங்களின் அன்புப் பெறாமகன்
**சுகி குடும்பம்**
யாழ்ப்பாணம் (18.06.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவாக வழி நடத்திய அக்கா

அக்கா நீங்கள் எங்களின் அம்மாவாகவும், சகோதரியாகவும் வழி நடத்தி வந்தீர்கள். ஆனால் இன்று எங்கள் அக்கா இல்லை என்பதை எம்மால் நினைக்க முடியாமல் இருக்கிறது.

முன்னைய காலங்களில் நீங்கள் கிளிநொச்சியில் இருந்து தெல்லிப் பளைக்கு வரப் போகிறீர்கள் என்பது தெரிந்தால் எமக்கு அவ்வளவு சந்தோசமாக இருக்கும். நீங்களும் அம்மாவும் எங்கள் வீட்டு விறாந் தையில் தாய் பிள்ளை போல் இல்லாமல் சகோதரிகள் போல இருந்து கதைத்துக் கொண்டே இருப்பீர்கள். நீங்களும் புதினங்கள் கூற அம்மாவும் புதினங்கள் கூற ஒரே கதையாகத் தான் இருக்கும். இப்போதும் அந்தக் காட்சி எங்கள் கண்ணுக்குள்ளே வருகிறது.

அக்கா நீங்கள் எங்களின் அம்மா தான். எங்கள் உயிர் உள்ளவரை உங்களை மறக்க மாட்டோம்.

எங்களோடு என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள் அக்கா.

*உங்கள் அன்புச் சகோதரி*
**அகிநேசம் ஜெயராசா**
*பிரான்சு (19.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீச்சரின் தம்பி அன்ரா

சிறு குழந்தையில் இருந்தே என்னைப் பார்த்துப் பார்த்து வளர்த்த பெரியக்கா.

நான் குழந்தையாக இருக்கும் போது, நல்ல சுவையான உணவுகள் சமைத்தால் அதை எடுத்து ஒழித்து வைத்து, எனக்கு அதை ஊட்டு வீர்கள் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. அக்காவும் அன்னையுமாக இருந்து என்னை வழிநடத்திய நீங்கள் காலமாகி விட்டீர்கள் என்று நான் நினைக்கவில்லை. இறைவனடி சேர்ந்து எம்மை வழி நடத்துகிறீர்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

கவலையில் வாடும் போது எம்மைத் தேற்றுவதும் அதுவே. உண்மை யும் அதுவே.

“அன்ரா” என்று என்னை என்றும் நீங்கள் அன்புடன் அழைக்கும் பொழுது கல்லும் கரைந்துவிடும். என்னைப் பார்க்கும் போதெல்லாம் “ஏன் மெலிந்து விட்டாய் அன்ரா” என்று கேட்பீர்கள்.

பாடசாலைகள் மாறினாலும் கஷ்டம் பாராமல் என்னையும் உங்களுடன் கூட்டிச் சென்று நல்ல கல்வியை ஊட்டியதை எப்படி மறப்பேன் அக்கா. பள்ளிப் பிள்ளைகள் பயபக்தியாக, “டீச்சர் டீச்சர்” என்று கூப்பிடும் போது, “நான் டீச்சரின் தம்பி” என்று எனக்குள் ஒரு கர்வம் கொள்வேன். நான் உங்களை அக்காவாகத் தான் பார்த்தேனன்றி டீச்சராகப் பார்க்கவில்லை. இன்று உங்களிடம் படித்தவர்கள் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும், பல துறைகளில் வல்லுநர்களாக இருப்பதையும், அவர்கள் உங்களை எவ்வளவு நேசித்தார்கள், எவ்வளவு பெரும் மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதையும் இறுதிப் பிரியாவிடை நேரத்தில் கண்டு உங்கள் பெருமைகளை மிக உயரத்தில் வைத்துப் பார்க்கின்றேன். எல்லோரும் என்னை டீச்சரின் தம்பி என்றுதான் கூறுவார்கள். ஆதலால் என்றும் எனது பெயர் “டீச்சரின் தம்பி அன்ரா”.

பெரியக்கா நீங்கள் எம்மோடு நினைவாகப், பேச்சாக, மிடுக்கான உடன் பிறப்பாக என்றும் வாழ்வீர்கள்.

உங்கள் கடைசித் தம்பி
**அன்ரன் ஜெகநாதன்**
ஸ்ராஸ்லுர்க், பிரான்சு *(19.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவாத என் மூத்த அக்கா

என் உடன் பிறவாத மூத்த அக்காவாக இருந்து, தாயாக மாறிய எனது அன்பான அக்காவிற்கு ஒரு சில வார்த்தைகள்.

என்னை, எனது சிறுவயது முதல் அன்போடு அரவணைத்து ஆசை யாகப் "பிள்ளை" என்று அழைத்து சின்னச் சின்ன கதைகள், பாடல்கள் கூறியும் பாடியும் எனக்கு உணவு ஊட்டி வளர்த்தீர்கள். நீங்கள் ஆரம்ப கால ஆசிரியர் பணியை கிளிநொச்சி சென். தெரேசா பெண்கள் கல்லூரியில் தொடங்கிய வேளையில், விடுமுறை காலங்களில் எனது வீட்டுக்கு வந்தால், நான் உங்களைத் திரும்பிப் போக விடமாட்டேன். அந்தச் சமயங்களில் ஆதரவாக அன்போடு பலவிதமான கதைகளைச் சொல்லி என்னைத் தேற்றி விட்டுப் போவீர்கள்.

என்னுடைய வளர்ச்சியில் தொடர்ந்து நீங்கள் பயணித்தமையை நான் அன்றும் இன்றும் அன்போடு நினைவு கூருகின்றேன். எனது தந்தையாரின் மரணத்திலும் சரி, எனது திருமணத்திலும் சரி, நீங்கள் அம்மாவாக, அக்காவாக என்னுடன் நின்று தோள் கொடுத்தீர்கள்.

உங்கள் வாழ்க்கையில் எத்தனை, எத்தனை இடர்கள் ஏற்பட்ட போதி லும் சளைக்காமல் துணிவுடன் நிமிர்ந்து நின்று எதிர்கொண்டு போராடி மகத்தான வெற்றியும் பெற்றீர்கள். நீங்கள் கொண்ட வெற்றிப் பதக்கங்களாக மூன்று முத்துக்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் இந்த நாட்டிற்கேற்ப அன்பான பகுத்தறிவாளச் செல்வங்களாக உரு வாக்கி உள்ளீர்கள். அவர்கள் அம்மாவின் பெயர் சொல்லும் பெருமை மிக்க செல்வங்களாக உள்ளனர். அவர்களும் முறையே திருமண வயதை அடையும் போது, இனிதே இல்லற வாழ்வில் இணைய வைத்து, மகிழ்ந்து பேரப் பிள்ளைச் செல்வங்களைக் கண்டு அவர்களுடைய வளர்ச்சியிலும் அன்பிலும் திளைத்து இன்புற்று இருந்த எங்கள் அக்கா என்றும் அன்புத் தெய்வம்.

வயதின் மூப்பு காரணமாகவும், உடம்பின் தளர்வு காரணமாகவும், ஒரு சில காலங்கள் ஒரு இடத்தில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. அக்காவினுடைய இறுதித் தருணங்களில் அத்தான், பிள்ளை கள், வளர்ப்பு மகளாகிய புஸ்பா, பிள்ளைகள், ஊர் மக்கள், உற்றார், உறவினர் அனைவரும் புடை சூழ ஒரு ராஜ மாதாவாக இவ்வுலகை விட்டு நீங்கி உள்ளீர்கள். உங்களுடைய பூதவுடல் தான் இவ்வுலகை விட்டுப் போய் விட்டதே தவிர உங்களுடைய அன்பும் ஆளுமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளும் நாம் இருக்கும் வரை வாழும்.

உங்களை இழந்து தவிக்கும் அத்தான் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் புஸ்பா குடும்பத்தினர் அனைவருக்கும் எங்கள் ஆறுதலையும் அரவணைப்பையும் தெரிவித்து அன்புடன் வணங்குகின்றேன்.

இங்கனம் உங்கள்
**அன்புத் தங்கை புஸ்பா நீதிராசா குடும்பம்**
ரொறன்ரோ, கனடா.
*(12.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கூட்டின் முதல் தூண்

எம் குடும்பத்தின் முத்தான மூத்த அண்ணாவைக் கைப்பிடித்த அண்ணி நீங்கள்.

நீங்கள் நமது வீட்டுக்கு வரும்போது உங்கள் அழகிய உருவமும், பேச்சும், நடையும் உடையும் அழகாக இருக்கும்.

அத்தோடு எம்மையும் இந்த உருத்திரபுரம் மக்களையும் அரவணைக்கும் உங்கள் பாங்கு மிகவும் பெருமைக்குரியது. எங்கள் எல்லோரையும் "தம்பி" அல்லது "பிள்ளை" என்று தான் அழைப்பீர்கள்.

உங்கள் சுவையான உணவுகளை எம்மால் மறக்க முடியாது.

எங்களில் சிலரை நீங்கள் கற்பிக்கச் சென்ற இடங்கள் எல்லாம் கூட்டிச் சென்று வைத்திருந்து படிக்க வைத்ததும் உண்டு.

உதாரணத்துக்கு தருமரட்ணத்தை உங்கள் தம்பியுடன் கூட்டிச் சென்று இரண்டு பேரையும் உங்களோடு வைத்திருந்து படிக்க வைத் தீர்கள். எங்களில் சிலருக்கும் பிள்ளைகளுக்கும் நீங்கள் தான் உருத் திரபுரத்திலும் சிவநகரிலும் குறிப்பாக லோகநாதன், கோகுலகௌரி, சதானந்தன், தயானந்தன், சுதானந்தன், ஜெயானந்தன், உசானந்தன், சசிரூபா ஆதவன் போன்றோருக்கு ஆசிரியையாக இருந்தீர்கள். உசா நந்தனும் ஆதவனும் பாடசாலையில் உங்களின் புடவையைப் பிடித் தபடியே பின்னுக்கு திரிவார்கள். பெரியம்மாவின் அல்லது மாமியின் பாடசாலைக்குத் தான் நாம் போவோம் என்று அடம்பிடித்து வருவார் கள்.

"கியாங் கியாங் குருவி" என்ற பாடலை உங்களது பிள்ளைகளுக்கு மட்டும் சொல்லிக் கொடுக்கவில்லை. எமது பிள்ளைகள் எல்லோருக் குமே பெரும்பாலும் அந்த பாடலை ஆடிப் பாடிச் சொல்லிக் கொடுத் தீர்கள். அந்த பாடல் இன்றும் நமது பிள்ளைகள் மனதில் வைத்திருக் கின்றார்கள். பிரான்சில் மாணிக்கத்தின் (சரவணபவன்) பிள்ளை களுக்கு நீங்கள் தமிழ் சொல்லிக் கொடுத்த அதே பாடசாலையில் அவர்கள் இப்பொழுது தமிழைப் கற்பிக்கின்றனர் என்பது எமக்கு மிகவும் பெருமையாக உள்ளது.

உள்ளதை உள்ளபடி நேர்படப் பேசும் துணிச்சலும் கலகலப்பாகப் பழகும் சுபாவமும், உங்களோடு பழகியவர் எல்லோருக்கும் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு குடும்பம் கூட்டுக் குடும்பமாக இருப்பது என்பது இறைவனின் அருளால் மட்டுமே. அப்படி கூட்டுக் குடும்பமாக இருப்பதற்கு அந்த வீட்டில் வாழ வரும் மருமக்களின் ஒத்துழைப்பாலும், ஒருங்கிணைப் பாலும், அரவணைப்பாலும், விட்டுக் கொடுத்தலாலும் மட் டுமே அது சாத்தியமாகும். அந்த வகையில் எமது அழகிய கூட்டை தாங்கிப் பிடித்த முதன்மையான நபர் நீங்கள். உங்களின் செயல்கள், வாழ்வு முறைமைகள் என்றும் எம்முடன் வாழும்.

எமது குடும்பத்தின் மூத்த உறவை, எங்கள் கூட்டின் முதல் தூணை இன்று இழந்து நிற்கின்றோம்.

*02/11/2006* இல் இன அழிப்பில் கொல்லப்பட்ட எம் கூட்டின் ஐந்து உறவுகளை வைத்துப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் நாம் இப்போது உங்களையும் அவர்கள் அருகிலேயே வைத்துப் பிரார்த்தனை செய் கின்றோம். உங்கள் நினைவுகள் எங்களோடு என்றும் துயிலாது நீளும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புடன்
**ச.மு குடும்பம்**
உருத்திரபுரம் கிளிநொச்சி (18.06.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பெரியம்மா!

*தேன் மொழியாம் தமிழ் மொழியை என் கைப் பிடித்து,*
*“அ” எழுதி ஆரம்பித்தவரே! எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை*
*எங்களுக்குக் கற்றுத் தந்த பெரியம்மாவே!*
*உலக மொழிகளுக்குத் தாய்வீடு தமிழ் என்று உணர்வு பூர்வமாக*
*ஒளியேற்றி உணர்வித்தவர் நீங்கள்தானே பெரியம்மா!*
*எங்களுக்கு மொழியை மட்டுமா ஊட்டிவிட்டீர்கள்?*
*ஈழத்திருநாட்டின் தமிழ் மண் உணர்வுகளையும் தமிழ்ப்*
*பண்பாடுகளையும் சேர்த்தல்லவா ஊட்டிவிட்டீர்கள்*
*பெரியம்மா!*

*உங்கள் செல்லத் தமிழ்மொழி கேட்டு நானும் அவ்வழியே தமிழ் கற்கத் தொடங்கினேன். பின்னர் நீங்கள் சேர்ஜி தமிழ்ச்சோலையில் தமிழ் கற்பிக்கத் தொடங்கியவுடன் நானும் எனது இரண்டு தம்பிகளும் தமிழ் கற்பதை உங்களிடம் தொடர்ந்தோம். தங்களின் வழிகாட்டல் தமிழால் இன்று அதே சேர்ஜி தமிழ்ச்சோலையில் நானும் எனது தம்பியும் ஆசிரியராகப் பணியாற்றுகிறோம். இதை நினைக்கும் போதே என் மனம் பேருவகை அடைகிறது பெரியம்மா! நீங்கள் தொடக்கி வைத்த தமிழ்ச்சோலையில் இன்று ஆயிரமாயிரம் பூக்கள் பூத்திருக்கின்றன. அத்தனைக்கும் காரணம் நீங்கள்தானே பெரியம்மா!*

*தமிழ் எனும் போதே உங்கள் முகமே ஞாபகத்துக்கு வருகிறது. இன்று எங்கு சென்றீர்கள் எங்கள் பெரியம்மா? உங்கள் வீட்டுக்கு வரும்போது தமிழை மட்டுமா ஊட்டிவிட்டீர்கள்! எங்களுக்குத் தாயாக இருந்து உணவையும் சேர்த்தல்லவா நீங்கள் ஊட்டிவிட்டீர்கள். அன்று உங்கள் மாணவராய் படித்து வளர்ந்தோம். இன்று உங்களைப்போல் பலரைப் படிப்பித்து வளர்க்கின்றோம். என்றும் அழியா நினைவோடு வாழ்ந்து உயர்வோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*மைத்துனர் சரவணபவன் பிள்ளைகள்*
**சோபிகா, தோத்தோ, குட்டி**
*சேர்ஜி, பிரான்சு*
***(10.06.2022)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது காணிக்கை

அம்மம்மா என்ற உறவுக்கு அப்பால் நீங்கள் எமக்கு ஒரு ஆசான். ஆகவே உங்களை நினைக்கும் போது இந்தப் பொன் மொழிகளே எமக்கு மனதில் தோன்றுகின்றன.

1. கற்க கசடற கற்றவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

2. கல்வி என்பது கடல் அதைக்
   கற்றுக் கொடுப்பது தவம்.

3. நம்பிக்கை கைவிடலாம். ஆனால் நீ கற்ற கல்வி
   என்றும் உன்னைக் கைவிடாது.

4. மாதா, பிதா, குரு, தெய்வம் என்போம்...
   இம் மண்ணில் குருவே யாவருக்கும் சிறந்த தெய்வம்.

5. நமக்குக் கற்பிப்பவர்கள் எல்லாம் ஆசிரியர்கள் அல்ல. யாரிடம் நாம் கற்றுக்கொள்கிறோமோ, அவரே நமக்கு ஆசிரியர்.

6. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

பெருந்தவம் எனப் போற்றி நமக்குக் கற்றுக் கொடுத்தீர்கள்.

எம்மைப் போன்ற பலர், சென்ற இடமெல்லாம் ஏற்றம் பெற்று வாழ வழி வகுத்த தெய்வம் நீங்கள்.

சென்று வாருங்கள் அம்மம்மா.

ஒவ்வொருவருடைய கல்வியிலும் நீங்கள் வாழ்வீர்கள் அம்மம்மா...

நன்றி.
**அபிதா, சுரேகா, தனுஸ், தருண் ஜெயானந்தன்**
*பிரான்ஸ் (20.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Very Beautiful Soul*

Ammamma / aunty,

You are a beautiful soul inside out. Someone who's brave and adorable. You were a person we all looked up to on any occasion. We miss having beautiful conversations with you, we miss your special sea food dish, we miss the way you make everyone feel like family. You treated everyone more than what we deserved. We shall all cherish the wonderful moments we had with you all these years.

You are still alive in many hearts.

We all miss you everyday although we know that you are in a better place filled with love.

May your soul Rest In Peace.

Love you ammamma / aunty
**Murali, Deeba, Aina, Rithiga**
Rugby, England. (17.06.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாக்கம்

# மிக அழகான ஆன்மா

அம்மம்மா / ஆன்ட்டி,

நீங்கள் ஒரு அழகான ஆத்மா. நாம் எல்லோரும் எச்சந்தர்ப்பத்திலும் உங்களைப் பெருமையுடன் பார்த்தோம். உங்களின் அழகான உரை யாடல், உங்களின் சிறப்பான கடல் உணவுக் கூழ், நீங்கள் அனை வரையும் ஒரே குடும்பமாக அரவணைக்கும் பாங்கு, போன்றவற்றை நாம் இப்போது இழந்திருக்கின்றோம்.

நீங்கள் ஒவ்வொருவரையும் அவர்களுக்கு தேவையானதை விட அதிகமாகவே அன்பாக நடத்தினீர்கள். இத்தனை வருடங்களும் உங்களோடு இருந்த அந்த அற்புதமான தருணங்களை நாம் அனை வரும் போற்றுகின்றோம்.

நீங்கள் இன்னும் பல இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

நாங்கள் எல்லோரும் உங்களை இழந்து நின்றாலும் அன்பு நிறைந்த ஒரு மிக நல்ல இடத்தில் இப்போது நீங்கள் இருக்கின்றீர்கள்.

உங்களது ஆத்மா சாந்தி அடையட்டும்.

உங்களை என்றும் நேசிக்கின்றோம் அம்மம்மா, ஆன்ட்டி.

அன்புடன்
**முரளி, தீபா, ஜனா, ரித்திகா**
ரக்பி, இங்கிலாந்து *(15.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஞ்சுப் புலம்பெயர் தொடக்க கால தமிழ்ச் சந்ததியினருக்கு
தாய் மொழி கற்பித்து முதல் ஒளி கொடுத்தவர்

# திருமதி அருளம்பலம் ஞானசௌந்தரி

புலம்பெயர் ஈழத் தமிழரின் முதல் தலைமுறையினரின் சந்ததிக்குத் தாய் மொழி, கலை, பண்பாட்டைக் கற்பித்தல் ஒளி கொடுத்தவர்களில் அமரர் திருமதி ஞானசௌந்தரி ஆசிரியையும் ஒருவர்.

தமிழ் மாணவர்களுக்குத் தரப்படுத்தல் மூலம் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளும் அரசாங்கத்தினால் மறுக்கப்பட்டபோது 1970 களில் இலங்கையில் தமிழ் மாணவர் போராட்டம் படிமுறையாக எழுச்சி பெற்றது. இது 1974ல் யாழில் நிகழ்ந்த நான்காவது உலகத்தமிழாராட்சி மாநாட்டின் இறுதி நாள்அழிவோடு கூர்மையடைந்தது. இத்தகைய சூழமைவால் உயர்கல்வி மறுக்கப்பட்ட மாணவர்களில் வசதிபடைத்த ஒரு பகுதியினர் ஆங்கிலப் புலம் சார்ந்த வெளிநாடுகளுக்குப் புலம் பெயரத் தொடங்கினர்.

இலங்கையில் கிரமமாக நிகழ்த்தப்பட்ட 1977 - 1981 - 1983 இனக் கலவரங்கள் தந்த பயப்பீதியியான பாதுகாப்பின்மையால் உயிரிழப்பும், சொத்துக்கள் இழப்பும் ஏற்பட்டபோது மாணவ இளைஞர்களை திசை தெரியாத இடப்பெயர்வாக உந்தித்தள்ளியது. இது இந்தியா மற்றும் ஆங்கிலம் பேசும் நாடுகள் தவிர்ந்த மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்குப் பல்லாயிரக்கணக்கில் எமது மக்கள் புலம்பெயர வழிசமைத்தது.

அந்த வகையில் பிரான்ஸ் நாட்டிற்கும் பல்லாயிரம் தமிழர்கள் குடி பெயர்ந்தனர். இத்தகைய புதிய சூழலில் இவர்களோடு இணைந்து வந்த இளம் தலைமுறையினருக்கும், இங்கு குடியேறிய குடும்பத் தினர்க்குப் பிறந்த இளைய தலைமுறையினருக்கும், தமிழ் - தமிழ் மரபுசார் பண்பாட்டையும் கற்றுக்கொடுக்கும் தன்னார்வச் செயற்பாடுகள் தோற்றமடைந்தன. இதற்காக ஆங்காங்கே பரவலாக தமிழ்ச் சங்கங்கள் உருவாகின.

இத்தகைய முன்னெடுப்பாக 90களில் பிரான்ஸ் தேசத்தில் பாரீசுப் புறநகரான சேர்ஜி (95) இல் சங்கம் அமைத்து தமிழ்ப் பள்ளி நடத்த ஆசிரியர் திரு. அருளம்பலம் முருகேசு அவர்களும் வோரியல் எனு மிடத்தில் திரு.இராசநாயகம் அவர்களும் முயற்சித்தார்கள். பாரிஸ் தமிழ்ச் சங்கம் மூலம் இருவரும் இணைக்கப்பட்டு சேர்ஜி தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தை உருவாக்கினார்கள். அதன் உப நிர்வாக சபையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்ச்சோலை"யில் எனவாக திருமதி. இராசநாயகம் தலைமையில் 10பேர் கொண்ட உறுப்பினர்களுடன் இயங்கியது. இதில் ஒருவராக ஆசிரியை திருமதி. அருளம்பலம் ஞானசௌந்தரி அவர்களும் செயற் பட்டார்.

ஐந்து வயது முதல் 20 வயது வரையான கிட்டத்தட்ட 100 மாணவர் கள் வயது, தமிழ்மொழித்திறன் அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். இந்த வகுப்புகள் *Maison de Quartier Cergy* இல் நான்காவது இரண்டாவது பிரிவுகளும், *Touleuses Maison de Quartier* இல் மூன்றாவது, முதலாவது பிரிவுகளும் கொண்டதாய் நடைபெற் றன. இதனை தமிழ் கற்பிக்க மேற்கொண்ட ஆரம்பகால ஆவணமாய் இங்கு பதிவிடுகிறேன்.

இலங்கையில் ஆறுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் ஆசிரியையாக வும் தலைமை ஆசிரியராகவும் கடமை புரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி அருளம்பலம் ஞானசௌந்தரி அவர்கள் முதலாம் பிரிவு மாணவர்களுக்குத் தாய்மொழிக் கல்வியை புகட்டினார்.

"ஆசிரியர்களை நம்பி இங்கு வரும் சிறார்களுக்கு நல்லாசிரியராக இருந்து அறிவு புகட்டிட வேண்டும்." என்பது பெற்றோர் ஆசிரியர் கூட் டத்தில் எப்போதும் வலியுறுத்துவார்.

அத்துடன் மாணவர்கள் தமிழ் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில் பெற்றிடவும் 1996ம் ஆண்டுமுதலாவது ஒளிவிழா, 97/98 இல் நடைபெற்ற முதலாவது ஆண்டுவிழா 1997இல் இரண்டாவது ஒளி விழா, 98/99 இரண்டாவது ஆண்டுவிழா, 1998இல் மூன்றாவது ஒளி விழா ஆகிய நிகழ்வுகளில் மாணவர்கள் தமிழ்பேச்சு, உரையாடல், நாட்டுப்புறப்பாடல், ஆடல், சிறுவர் நிகழ்ச்சிமூலம் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் அரங்காற்றுகைகளை நிகழ்த்தினார். இதன் மூலம் தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்காக நிதி திரட்டவும் உதவினார்.

இந்தச் சிறுவர் நிகழ்வுகளை ஒளிப்படம், வீடியோ மூலம் தயாரித்துள் ளதை தாயகத்தில் உள்ளோரும் பார்வையிட்டனர். இது புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளரும் சந்ததியினருக்காக பொதுவான தமிழ்ப் பாடம், நுண்கலைப் பாடத்திட்டங்கள் உருவாக்கிடவும் புலம்பெயர்ந்த நாடுகளுக்குப் பல கல்விமான்களை வருவிக்கவும் ஓர் உந்துதலாக அமைந்தது.

பின்னர் 2000களில் தொடர்ந்த ஒருங்கிணைந்த பொதுப் பாடத் திட்டத்தை உருவாக்க ஐரோப்பாவுக்கு (சுவிஸ்) பேராசிரியர் சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற அறிஞர்களும் நுண்கலைகள் பகுதிக்கு நடனப் பேராசிரியை திருமதி சாந்தி சிவநேசன் போன்றோர் சுவிஸ் நாட்டுக்கு வந்தனர்.

இந்தவகையில் தமிழ் மொழிக்கு ஆண்டு 12 வரையான பாடநூல் களும் நுண் கலைப் பாடத்திட்டமும் உருவாக்கும் "கரு"வினை வித்திட்ட வர்களில் அமரர் திருமதி அருளம்பலம் ஞானசௌந்தரி அவர்கள் முதன்மை யானவர்களில் ஒருவராவார்.

அன்னார் கற்பித்த 90கள் காலத்தில் ஆசிரியர்கள் தாமாகவே பாடத் திட்டங்களை உருவாக்கி திறம்படக் கற்பித்தனர். மாணவர்களுக்கு இலவச தமிழ்க் கல்வியையும் ஆசிரியர்கள் எந்தவித வேதனமும் இல்லாமல் அர்ப்பணிப்புடன் பணி புரிந்தனர் என்பதையும் தனியாயக் குறிப்பிடவேண்டும்.

இன்று அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ்ச்சோலைப் பள்ளிகள் தமிழ்ச் சோலை தலைமைப் பணியகம் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. தலைமைத் தமிழ்ச்சோலையால் ஆண்டு 12வரை தமிழ்மொழி பொதுப் பரீட்சைகள் ஆண்டுக்கு ஆண்டு நடைபெறுகின்றன. அத்துடன் தமிழ் இளங்கலை, முதுகலைமானிப் பட்டப்படிப்புகளும் தபால் மூல கல்வியில் தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்கள் மூலம் நடத்தப் படுகின்றன.

புலம்பெயர் நாடுகளில் பிறந்த மாணவர்கள் ஆண்டு 12 வரை சித்தி யடைந்ததுடன் தமிழ் இளங்கலைமானிப்பட்டமும் பெற்றிருக்கின்றார் கள். திருமதி அருளம்பலம் ஞானசௌந்தரி அவர்களிடம் தொடக்கக் கல்வி கற்ற இரண்டு மாணவர்கள் 2011ஆம் ஆண்டு முதல் தமிழ் ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர்.

இன்று உலகில் பரந்து வாழும் தமிழ் மக்கள் வாழையடி வாழையாக தமிழ் மரபு வழியாக வந்த பண்பாட்டை கடத்திச் சென்றிடவும் தமிழ்மொழி பட்டப்படினை கற்றிடவும் ஒளியேற்றியவர்களில் ஆசிரியை அருளம்பலம் ஞானசௌந்தரி அவர்களுக்கும் ஒருவராவார்.

நன்றி

**த.தியாகராசா**
*காரியதரிசி, பொருளாளர், நிர்வாக உறுப்பினர்*
*(1996இல் இருந்து 2018 ஆம் ஆண்டு வரை)*
*தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேர்ஜி பிராங்கோ தமிழ்ச்சங்கம் சேர்ஜி (95)*
*சேர்ஜி, பிரான்ஸ் (13.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல்

*நல்லாசிரியர் திருமதி ஞானசௌந்தரி அருளம்பலம்*
***(25.7.1937 – 13.5.2022)***

சமூக ஊடகத் தொடர்பாடல் வழியாக நீண்ட காலமாகச் சுகயீனமுற்றிருந்த நிலையில் திருமதி ஞானசௌந்தரி அருளம்பலம் அவர்கள் காலமாகிய துயர் தகவல் எமை வந்தடைகிறது.

நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்
வாளாது உர்வார்ப் பெறின். (குறள் 334 – நிலையாமை) எனும் இயற்கையின் நியதியைச் சுட்டியவாறு காலம் கரைகிறது.

இலங்கையில் முற்றிய தேசிய இன முரண்பாடுகள் சென்ற நூற்றாண்டின் கடைசிக் காற்பகுதி காலகட்டம் முதல் இலங்கைத் தமிழர்களை பூர்வீக மண்ணிலிருந்து நாடுகள் – கண்டங்கள் தாண்டியதாய் தூக்கி விசிறியெறிந்தது. இது 'அகதி' எனும் புதிய அடையாளத்துடன் காலநிலை, மொழி, பண்பாடுப் பன்மைத்துவப் புதிய புலத்தேசங்களில் புகலிடம் பெற்றவராக்கியது. இந்த வகையில் புலம் பெயர்ந்த வாழ்வின் முதற் தலைமுறையினராக புதிய சூழல் தடத்தில் பயணித்தவர்களதும் அவர்களோடிணைந்து வந்த அடுத்த தலைமுறையினரது வாழ்க்கை 'புகலிட வாழ்வு' அல்லது 'புலம்பெயர் வாழ்வு' எனப் பதிவுறுகிறது. இவ்வகையில் வெளிப்படும் செம்மையாக்கங்கள் புலம்பெயர் இலக்கியங்களாக தமிழில் தனித்துவமாய் பதிவுற்று வருகிறது.

அக்காலகடத்தில் பிரான்சில் தஞ்சமடைந்திருந்த முதற் தலைமுறையினராகச் சிலர் இந்த புதிய 'பிரெஞ்சுப் புலம்பெயர்வு வாழ்வை எப்படி எதிர்கொண்டுதகவமைப்பது?' எனும் நோக்கில் சமூகக் கரிசனையோடு அணுகத் தொடங்கினர். அக்காலத்தில் புலம்பெயர் தேசங்கள் எங்கும் பரவலாகக் கையெழுத்துப் பிரதிகளாக பல்வேறு சஞ்சிகைகள் வெளிவந்துகொண்டிருந்தன. இதனது அடுத்த கட்டமாக வார / மாத இதழ்கள், வானொலிகள், தொலைக்காட்சி ஒளிபரப்புகள்என ஊடகப் பயணமும் அமைந்தது. இத்தேடலில் புலப்பெயர்வில் தம்மோடு அழைத்து வந்திருந்த அடுத்த தலைமுறைச் சிறாரும் இங்கு பிறந்த இரண்டாவது தலைமுறைச் சிறாரும் தமிழ்மொழி கற்கையைப் பெறல் அவசியம் என்ற பொது முடிவு கண்டடையப்பட்டது. தொண்ணூறுகளில் இதற்கான முயற்சிகள் தனியாகவும் கூட்டாகவும் தன்னியல்பாக முன்னெடுக்கப்பட்டன. புலம்பெயர்ந்த ஐரோப்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் ஆங்காங்கே தமிழ்ச் சமூக ஆர்வலர்கள் தத்தமது வீடுகள் மற்றும் பொது மையங்களில் தமிழ் - பண்பாட்டுக் கற்கைக் கூடங் களைத் தோற்றுவித்தனர்.

இந்த வகை, புதிய சூழலுக்கமைவான 'தமிழ்' கற்கை முறைமை தொடர்பாக பாரீஸ் பெருநகர வட்டாரத்தில் அருளம்பலம் மாஸ்டர், திருஞானகரன், கிபி அரவிந்தன், வேலழகன் போன்றோர் ஓர் ஒருங் கிணைவில் மையம் கொண்டனர். தொண்ணூறுகளின் கடைசியில் இவர்களது இந்தச் செயற் திட்ட முன்னெடுப்புக்காகப் பிரான்சின் மேற்கெல்லையில் அமைந்த பிறஸ்ட் (**Brest**) நகரில் வாழ்ந்த நான் இவர்களோடு அறிமுகமானேன். இதன் நீட்சி ஆசிரியத்துவம், கற்பித் தல் முறைமை தொடர்பான ஈடுபாடாக திருமதி ஞானசௌந்தரி அருளம்பலம் அவர்களை இயல்பாக அறிமுகப்படுத்தியது.

அருளம்பலம் மாஸ்டருடனான அறிமுகம் இனம்புரியாத உணர்வாய் முதற் சந்திப்பிலிருந்தே ஈர்ப்புற்றதாய் அமைந்திருந்தது. இவரோடான தொடர்பாடல் படிமுறைகளாக வளர்ந்து குடும்பத்தினரோடு அறிமுக மாகி குடும்ப நட்பாக மலர்ந்தது. இவரது தந்தையார் சடையப்பர் முருகேசு (**1902-2006**) அவர்களும் எனது தந்தையார் ஓய்வுபெற்ற ஆசிரியரான இராமலிங்கம் கந்தையா (**1920-2006**) அவர்களும் ஈழத்தின் தனித்து தீவகமான நெடுந்தீவைப் பூர்வீகமாகக் கொண்டிருந்தனர் என்பதை அறிந்து நெகிழ்ந்தோம். கால நீட்சி இவர்களது மூத்த மகன் ஜெயசீலன் (பாபு-இலண்டன்), எனது துணைவியாரது அண்ணனின் மூத்த மகள் சத்தியகௌரி ஆகியோர் திருமண வாழ்வில் இணைய வழிசமைத்தது. இந்த வகையில் நாம் திருமண உறவுகளாகினோம். புலம்பெயர்வு வாழ்வில் 'தமிழ்' தந்த இணைவு இது. இப்போது இதை மீட்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

இலங்கையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கேயுரிய தனிதத்துவப் பண்புகளில் தமக்கு வரும் மாணவர்களது அக-புற நிலைப் புரிதல் தெளிவாக இருந்தது. அம்மாணவர்களின் பெற்றோர், அவர்களது இல்லச்சூழல் கொண்டிருக்கும் சமூகப் பொருளாதாரப் புரிதல் இருந் தது. இந்த வகையில் சிறார் மனநிலை பற்றியும் தெளிவான கனிவான - கண்டிப்பு அணுகுமுறை பற்றியும் இவர் வெளிப்படுத்திய கருத்து என்னைக் கவர்ந்தது. 'பெற்றோர் பெரும் நம்பிக்கையோடு தமது பிள்ளைகளை இங்கு அழைத்து வருகிறார்கள். இந்தச் சிறார்களை தங்கள் திறனறிந்த ஆற்றலாளர்களாக சிறந்த மனிதர்களாக வழிப் படுத்தும் தார்மீகப் பொறுப்பு ஆசிரியர்களுக்கு அவசியமானது' என இவர் ஒரு சந்திப்பில் கூறியிருந்ததை இன்றும் மீட்டுப்பார்க்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச உறவாலடாக அமைந்த அருளம்பலம் மாஸ்டருடான தொடர்பு பலமுறை அவரது இல்லம் சென்று அளவளாவ வழிசமைத்தது. நாம் எப்போது அங்கு சென்றிருந்தாலும் உளமார வரவேற்று விருந் தோம்பல் செய்து மகிழ்பவராக திருமதி ஞானசௌந்தரி இருந்தார். இவர் மிகச் சுவையான உணவு தயாரிப்பவராகத் திகழ்ந்தார். குறிப்பாக பல்வகையான சிற்றுண்டிகளைத் தயாரிப்பதில் நுட்பமான கைத்திறனைப் பெற்றிருந்தார். சைவச் சாப்பாடென்றால் ஏனோ தானோ எனப் பட்டும் படாததுமாகக் கடந்து செல்லும் எங்கள் தோழர் கி.பி. அரவிந்தன் ஒருமுறை இவர் தந்த அறுசுவை சைவ உணவை இரசித்து உண்டதை அருகாமையில் உணவருந்திய நானும் புன்முறு வலோடு நோக்கியதை என்றும் மறக்கவே முடியாது.

சென்ற நூற்றாண்டில் பிறந்த எமக்கு முன்னைய தலைமுறையினர் களில் பலர் மத நல்லிணக்கக் குடும்பங்களாக வாழ்ந்திருக்கின்றனர். அவ்வகையில் அமைந்தவர்களில் அருளம்பலம் - ஞானசௌந்தரி இணையரும் அடங்குவர். அருளம்பலம் ஒரு சைவர். ஞானசௌந்தரி ஒரு கத்தோலிக்கர். இத்தகைய குடும்பங்களில் பிறந்த பிள்ளைகளில் மதவெறித்தனம் புகாத தனித்துவமான சிறப்புப் பண்புகள் இருக்கும். இவர்களது மூன்று பிள்ளைகளிடத்தில் இதனை நாம் காண்கின்றோம். மருமக்களும் இவர்களோடு இயைந்தவர்களாக அமைந்தது சிறப் பானது. இந்த அருளம்பலம் - ஞானசௌந்தரி இணைய வழியான புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளரும் பிள்ளைகளது பெயர்கள் தனிக் கவனம் பெறுகிறது. அவை இலக்கியா, அட்சயன், ஓவியன், ஆதித்தன், இனியன், ஆரணன் எனத் தமிழ் மிடுக்கோடு இனிக்கிறது.

தொன்ம இனங்களில் ஒன்றாகச் சுட்டப்படும் தமிழர் வாழ்வியல் ஒரு தாய் வழிச்சமூகமாகும். தொன்மமும் தொடர்ச்சியும் நீட்சியுமான எமது பண்பாட்டு வாழ்வு, கால இடமாற்றங்களுக்கேற்பத் தக்க வைத்து, தகவமைத்து கடத்தும் பாரிய பணி 'தாய்'களாலேயே தொடரப்படுகின்றது. இதனை புலம்பெயர் தேசங்களில் உருவான தமிழ்ப் பள்ளிகளில் ஆசிரியர்களாக பெரும்பாலும் பெண்கள் பங்கேற்று வருவதை இந்த நோக்கின் சான்றாகக் கொள்ளலாம்.

இவரது பிள்ளைகள் மூவரும் கடுமையான உழைப்பாளர்கள். விடா முயற்சியாளர்கள். இவரது மகள் ஜெயசிறி சதானந்தன் (இலண்டன்) தமிழ் மொழி வெளிவாரிப் பட்டயக் கல்வியைப் பெற்றுப் பட்டதாரியாகி யுள்ளார். எமது அடுத்த தலைமுறை நம்பிக்கைதரும் ஒரு தமிழ் ஆர்வலராக இங்கிலாந்தில் செயலாற்றி வருகின்றார். ஜெயஸ்ரீ அவர்களின் வாழ்வுத் துணைவர் சதானந்தன் தமிழார்வம் மிக்க சமூகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரக்ஞையுடைய மருத்துவராக இங்கிலாந்தில் பணியாற்றுவதை இங்கே குறிப்பிட வேண்டும். ஒரு தாயாரைக் குறிப்பிட மேற்கண்ட பிள்ளைகள், சந்ததியினராகத் தொடரும் பெயரர்களது நன்னிலையே தகுநல் காலக் கண்ணாடி.

புலம்பெயர் வாழ்வின் நீட்சியில் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' எனும் வாக்கிய வழியைத் தொடரும் சிறப்புடையது அருளம்பலம் மாஸ்டரது வேரும் விழுதுகளுமான கூட்டுக் குடும்பம். தேசங்கள் கடந்த வாழ் விலும் ஒன்றிணைவதில் நல்லுதாரணர்களாகத் திகழ்கின்றனர்.

தனது அன்பு, பரிவு, அரவணைப்பு, விருந்தோம்பல், இன்சொல் உறவாடல் கொண்ட வாழ்வால் ஒரு சிறந்த மகளாக - ஆசிரியையாக - துணைவியாக - தாயாராக - மாமியாராக - பேத்தியாராக - உறவினராக - சுற்றத்தினராகக் கூடி வாழ்ந்தவராய் திருமதி ஞானசௌந்தரி அருளம்பலம் தனது வாழ்வை நிறைவு செய்திருக்கிறார்.

"பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை"

எனும் கவிஞர் வைரமுத்துவின் வரிகளுடன் 84 ஆண்டுகள்நிறைவான வாழ்வில் இவர் விட்டுச்சென்ற கனவுகளை ஈடேற்றுவோராய் குடும் பத்தார், உறவினர், சுற்றத்தினர் அனைவரும் நினைவேந்துவோம்!

'கேழுங்கள் தரப்படும்... தட்டுங்கள் திறக்கப்படும்...!'

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காலமாகிய திருமதி ஞானசௌந்தரி அருளம்பலம் அம்மாவுக்கு எமது இறுதி வணக்கம்!

**முகுந்தன் அருந்தா குடும்பம்**
இளவேனில் இலக்கியன்
*9.6.2022*, வில்தானூஸ் - பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மனங்களில் இன்றும் குடியிருக்கும் மாதரசியின் கல்விப் பயணம் (என் மனப் பதிவுகள்)

"தாமின் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு அமைய தான் கற்ற கல்வியால் பிறரை வளர்த்துப் பெருமை கொண்டு எம் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் என் நேசத்திற்குரிய ஆசானின் கல்விப் பணியைக் கனத்த இதயத்தோடு மீட்டிப் பார்க்கின்றேன்.

தேயாத குளிர் நிலவாய் தினம் தினம் அரவணைத்த அன்னையிவர் அன்பின் ஜோதி எந்நேரமும் புன்னகை பொலிந்த வதனம். மிடுக்கான தோற்றம்! கம்பீரமான நடை. அழகான சுருண்ட முடியை பின்னலிட்ட கூந்தல், மெதுவான நடை, இளவெயிலுக்கும் விரித்த குடையோடு எம்முன்னே நடமாடிய மான் விழியாள்தான் எங்கள் அருளம்பலம் ரீச்சர்.

மலர்களை மொய்க்கும் வண்டினம் போல ரீச்சரை சுற்றித் திரிந்த இனிமையான பள்ளிப் பருவ நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

ஆரம்பக் கல்வி ஆசிரியராக கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தில் நானோ 6ம் தர மாணவியாக பாடசாலையில் காலடி எடுத்து வைத்த போது என் கண்ணில் பட்டு தெறித்த அழகு தேவதை தான் அருளம்பலம் ரீச்சர். அவரது வசீகரத் தோற்றமும் சினமறியாத பார்வையும் எந்த வகுப்பு மாணவர்களையும் ஈர்ப்பதில் வியப்பில்லை.

ஆரம்பக்கல்வி வகுப்பறையின் (பிரதான கட்டிடத்திற்கு பின்புறமாக இருந்த கட்டிடம்) முடிவில் ஒரு கொண்டல் மரம், எப்பொழுதும் அந்த மரம் பசுமையாகவே இருக்கும். அந்த மரத்தின் கீழிருந்து ஆண்டு 1, 2 பிள்ளைகளுக்கு அழகியல் பாடமான நடனத்தைப் பழக்கும் காட்சி இப்பொழுதும் என் மனக் கண் முன் நிழலாடுகிறது. "வருவாயா வேல்முருகா...." என்ற முருகனின் பாடலைப் பாடி தலையையும் கண்களையும் அசைத்து நளினத்தோடு பிள்ளைகளைப் பழக்கும் திறனே தனித்துவமானது. இப்போதுதான் நினைத்துப் பார்க்கிறேன். ஒரு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவராக எம் ஆசான் இருந்தும் மத பேதமில்லாத உன்னத ஆசிரியப் பணியூடாக மாணவர்களை வளர்த்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலாபம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஆசிரியராக முதல் நியமனத்தைப் பெற்றுக் கடமையாற்றி, ஆசிரியப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பின்பே கிளிநொச்சி மாவட்டத்தில் நியமனத்தைப் பெற்றவர். கிளிநொச்சி மாவட்டத்தின் மூலை முடுக்கெங்கும் தன் கல்விப் பணியை ஏழைப் பிள்ளைகளுக்காக ஆற்றிய பெருந்தகை எம் ஆசான்.

ஆசிரியப் பயிற்சியின் பின் கரையோரப் பிரதேசப் பாடசாலையான பூநகரி வலைப்பாடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் கடமையை ஆரம்பித்தவர். தொடர்ந்து கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும் தொடர்ந்து கிளி / வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் ஏழு வருடங்கள் சேவையாற்றி தனது புகுந்த வீடான உருத்திரபுரத்தின் கிளி / உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் சேவைக்காக கால் பதித்தார்.

அதன் பின்பு கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலையிலும் மீண்டும் கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலும் தனது ஆசிரியப் பணியை செவ்வனே ஆற்றிய வேளை அவரது ஆளுமை, தலைமைத்துவம், மாணவர் மீதான பற்று இவற்றை சீர்தூக்கிப் பார்த்து மீண்டும் கிளி / சிவநகர் அ.த.க. பாடசாலையின் அதிபர் பொறுப்பை அப்போதிருந்த வட்டாரக் கல்வியதிகாரி கையளித்தார். சிவநகர் பாடசாலை கிராம முன்னேற்றச் சங்க கட்டிடத்திலிருந்து தனக்கான நிரந்தர அமை விடத்தைப் பெற்று அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தினுள் 1985களில் முதல் பெண் அதிபராக தனது சேவை மூப்பினால் கடமையைப் பொறுப்பேற்று, இன்றிருக்கும் அமைவிடத்தை அழகாக்க அத்திவார மிட்ட எம் ஆசானின் உழைப்பு உன்னதமானது.

இவரது ஆசிரியப் பணிக்காலத்தில் நேர்த்தியும் நிதானமும் மிக்க நல்லாசானை பதினொரு வயது சிறுமியாக நான் சந்தித்த பொழுதுகள் இறைவன் தந்த வரமாக மீட்டுப் பார்க்கின்றேன்.

ஆரம்பக்கல்வி ஆசிரியராக இருந்தாலும் ஏனைய பாடங்களை ஆசிரியர் வருகை தராதபோது தானாக முன்வந்து கற்பிப்பார். 1970, 1980களில் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் பெருமளவுக்கு யாழ் மாவட்ட நல்ல தரமான பல ஆசிரியர்களைக் கொண்டிருந்த வேளையில் எம் ஊரிலிலும் மிகச்சிறந்த ஆசிரியர்களாக சேவையாற்றிய பலரையும் இப்பொழுதிருக்கும் சந்ததியினர் எளிதில் மறந்துவிடமாட்டார்கள்.

ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்த கதிரவேலு ரீச்சர் குடும்பம், அருளம்பலம் ரீச்சர் குடும்பம், பாலசுந்தரம் ரீச்சர் குடும்பம், நமசிவாயம் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியானவர்களோடு, தையலம்மை ரீச்சர், தையல்நாயகி ரீச்சர், இவர்கள் ஊரவர் என்பதால் எம்மீதான அக்கறையும் அதிகமாகவே இருந்தது.

எல்லோரையும் வசீகரிக்கும் குணமும், கோபமே கொள்ளாத அருளம் பலம் ரீச்சரிடம் நான் படித்ததை விட கூடி வாழ்ந்த நாட்களே அதிகம். உரிமையோடு எம் பொழுதைக் கழித்த அழகான காலமது. மகள் ஜெய ஸ்ரீயை தூக்கித் திரிந்த பாசப் பிணைப்பு. இடைவேளைக்கு விடுதிக்கு ரீச்சரோடு சென்று சோறு பிரட்டிச் சாப்பிட்ட தருணம் எல்லாமே பசுமையான நினைவுகளாக எம்முள் வாசம் செய்ய நீங்கள் மட்டும் எங்கு சென்றீர்கள் ரீச்சர்?

பாடசாலை விட்டாலும் வீடுவர மனமின்றி பாடசாலை விளையாட்டு மைதானத்தைச் சுற்றி, விடுதியைச் சுற்றி, தோட்டத்தைச் சுற்றி வலம் வரும் எம் துடுக்குத்தனத்திற்கு பொறுமையோடு காவலிருப்பார். எங்கள் ரீச்சர் எல்லா வகையிலும் அன்னையாய் அணைத்து ஆசானாய் அறிவுரை புகட்டிய அற்புதமான தேவதையே இவர்.

காலச் சூழல், இடப்பெயர்வு, உள்நாட்டு யுத்தம் எல்லோரையும் ஓட ஓட விரட்டிய போதும் தன் குடும்பத்திற்காக இந்தியா சென்று மீண்டும் தன் தாயகம் திரும்பி தன் தொழிலையும் மண்ணையும் பிள்ளைகளையும் நேசித்தவர்.

உருத்திரபுரத்தின் சுவாசத்தையே விரும்புவர். எப்பொழுது நாடு திரும் பினாலும் இன்றுவரை அவரை நாடிச் செல்லும் மாணவர் கூட்டம் இருக்கிறது. யாரையும் இலகுவில் மறந்துவிடமாட்டார். ஒவ்வொரு கதைகளையும் மீட்கும் தருணம் அழகானது. ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து அருகில் இருத்துவார். அவ்வளவு ஞாபக சக்தி காணப்படும்.

நோயில் தளர்வுற்ற போதும் பெயர் கூறி அழைத்து முத்தமிட்ட தருணத்தில் இன்னும் அவருள் வாழ்வதை எண்ணி மகிழ்ந்தேன். ரீச்ச ரிடம் என்றுமே எமக்குப் பயமிருந்ததில்லை. தூய்மையான உள்ளம் யாரையும் விரும்புவாரே தவிர வெறுப்பதில்லை. இவ்வாறான ஆசிரியத் துவம் தான் இன்றுவரை எம் மனதில் அருளம்பலம் ரீச்சர் வாழ்கின்றார் என்பதற்கான சான்றாகும்.

தொழில், தன் குடும்பம் இரண்டோடும் ஒன்றியவர் தன் பிள்ளைகளை யும் மண்மீதும், மனிதம் மீதும், தமிழ் மீதும் பற்றுடையவராக வளர்த் துள்ளார். எங்கு சென்றாலும் இது என்னூர் என்ற அவரது உயரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்தான் அவர் உருத்திரபுரத்தில் சங்கமாக வைத்துள்ளது. அருளம்பலம் ஆசான் தேடிய எமக்கான அரிய சொத்து ரீச்சர்.

பல கனவுகளோடு படியேறிய எம் பாடசாலை வாழ்க்கையில் உயர்ந்த எண்ணங்களையும் ஒழுக்கமான வழிகாட்டல்களையும் எம்முள் விதைத்து வழிகாட்டிய உன்னத கல்விப் பணியால்தான் எங்கள் மனங்களில் இன்னும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

"மரணம் நிரந்தரமானது வடிவம் தெரியாதது" அந்த வகையில் உங் களை இன்று இழந்து நிற்கும் எம் மாண்பான ஆசானுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் உங்கள் பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அமைதி கொள்ளுங்கள். ஆண்டவன் அடியில்! உங்கள் உறவுகளோடு எம் நினைவுகளும் என்றுமே உங்களை வரித்துக் கொள்ளும்.

இவள்
**திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ்**
அதிபர்,
கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான ஒளி ஏற்றிய ஆசான்

எமது முன்னை நாள் ஆசிரியர் அருளம்பலம் ஞானசௌந்தரி அவர்களின் மறைவு எமது பிரதேசத்தில் ஆறாக் கவலையை ஏற்படுத்தும் சம்பவமாக அமைந்தது. அவரது ஆளுமையும், அழகும், கண்டிப்பும், கருணையும், கவனிப்பும் கொண்டவராக அவர் எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்தார். மற்றையோருக்கு எடுத்துக்காட்டாக முன்மாதிரியான ஆசிரியராகத் திகழ்ந்து மாணவர்களைக் கட்டுப்பாட்டுடன் வழிநடத்தி பண்புள்ள சமுதாயத்தை உருவாக்குவதில் அயராது உழைத்தார்.

சிறு வயதில் பிள்ளைகள், ஆசிரியரை முன்மாதிரியாக ஆக்கிக் கொள்வர். ஆசிரியர்போல் வரவேண்டும் அதிபர்போல் வரவேண்டும் என எண்ணிச் செயற்படுவர். அந்தவகையில் அருளம்பலம் ஆசிரியை அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு உருத்திரபுரம், சிவநகர் கிராமங்களில் பெருமளவான அதிபர் ஆசிரியர்கள் உருவாகியுள்ளார்கள். அவரது கணவர் ச.மு.அருளம்பலம் அவர்களும் ஆசிரியராக அவருடன் இணைந்து கல்விப் பணியாற்றியமை கல்விப் பண்பாட்டு வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தது.

"சாதாரண மக்களின் பிள்ளைகள், ஏழை விவசாயிகளின் பிள்ளைகள் கல்வியை நாடிச் செல்ல முடியாவிட்டால் அவர்களை நாடிக் கல்வி கற்க வரவேண்டும்" என்றார் சுவாமி விவேகானந்தர். அவரது கூற்றுக்கமைவாக இவர்கள் இருவரது கல்விப்பணி பின் தங்கிய பிரதேசப் பிள்ளைகளை நோக்கியதாக இருந்தது.

இவர் நோயுற்றிருந்த நேரங்களில் சென்று பார்க்கின்றபோது எவ்வித தளர்வும் இன்றி முகமலர்ச்சியுடன் இருப்பார். நோய் குணப்பட்டு மீண்டும் சுகதேகி ஆகிவிடுவார். அவரது மனத்துணிவு, சிறுபராயத்தில் அவரிடமிருந்த திடகாத்திரம், நேரிய பண்பு, எல்லோரையும் நேசிக்கும் மனப்பாங்கு, யார் யாருக்கு உதவிடவேண்டுமோ தேவையறிந்து உதவிடும் பண்புகளும் சிறப்பானது. இவையெல்லாம் இவருக்கு இறைவன் கொடுத்த கொடை என்றே கூறலாம்.

ஆசிரியை அவர்கள் சிவநகர் அ.த.க. பாடசாலை, உருத்திரபுரம் ம.வி ஆகிய பாடசாலைகளில் நீண்டகாலம் ஆசிரியராகவும் அதிபராக வும் சிறப்பாகப் பணியாற்றினார். ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற வேளையில் தனித்து நின்று எல்லாப் பாடங்களையும் கற்பிப்பார். ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கும் ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவித வேறுபாடுகளையும் காட்டாது மாணவர் நலன் சமூகநலன் சார்ந்தே செயற்படுவார். ஆசிரியை அவர்கள் கத்தோலிக்க சூழலைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் சைவப் பிள்ளைகளுக்கான அனைத்து சமய விழாக்களையும் நடாத்தி பிள்ளைகளை வழிப்படுத்தியதைக் காண முடிந்தது. ஆன்மீகம், பண்பாடு, சகோதரத்துவம் என்பன சமயக் கல்வியால் உருவாக வேண்டும் என உழைத்தார்.

இவரும் இவரது கணவரும் உருத்திரபுரம் ம.வி ஆசிரியர் விடுதியில் தங்கியிருந்து பணியாற்றிய வேளையில் வகுப்பு முடிந்ததும் நாம் ஆசிரியர் விடுதிக்குச் சென்று உணவருந்தி விளையாடி மகிழ்ந்து கல்வி கற்று வந்தது இன்றும் பசுமை நினைவுகளாக உள்ளது. அன்றைய மாணவர் ஆசிரியர் உறவு அற்புதமானது. மாணவர்களுக்கு வழிகாட்டி யாக அமைந்தது. ஆனால் இன்றைய ஆசிரியர் மாணவர் உறவு அவ் வாறில்லை.

இவர்களின் தவப்பயனாக மூன்று முத்துக்களைப் பெற்றெடுத்து அவர்கள் கல்வியில் உயர்ந்து பண்பும் பணிவும் கொண்டவர்களாக திகழ்வது இவர்களது நற்பணிக்குச் சான்றாக அமைந்துள்ளது. அவர் களது மருமகன் வைத்தியக் கலாநிதி சதானந்தன் அவர்கள் உள் நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் வைத்திய சேவை புரிவதுடன் கிளிநொச்சியின் அபிவிருத்தியிலும் மனித நேயப் பணிபுரிவதிலும் முக் கிய பணி ஆற்றிவருகின்றார்.

இவர்களது ச.மு.குடும்பம் என்பது பரந்து விரிந்த குடும்பம். பெருமள விலான உற்றார் உறவினர்களைக் கொண்டது. அனைவரையும் அன் புடன் அரவணைத்து நாட்டையும் மக்களையும் நேசித்து பல்வேறு பணிகளை ஆற்றி வருபவர்கள். ஆலயப் பணிகள், அறப்பணிகள், கல் விப்பணி என்பவற்றிற்கு மிக ஆர்வமாக உதவி வருபவர்கள். இக்குடும்ப உறுப்பினரான ஆசிரியை அனைவர்க்கும் ஞானவிளக்காகத் திகழ்ந்தார்.

ஆசிரியர் அவர்கள் தமது இறுதிக் காலத்தில் சொந்த ஊரான உருத் திரபுரத்தில் உறவினர்களும் குடும்பத்தினர்களும் அருகிருக்க இறை பதம் எய்தினார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திப்போமாக.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் உலகு " (குறள் 336)

அன்பு மாணவி
**திருமதி மகேஸ்வரி சிவஞானசுந்தரம்**
(ஆசிரியர்) சிவநகர், உருத்திரபுரம் (13.06.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பதிவிலிருந்து சில...

கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாற்று மரபுகளோடும், பாரம்பரியங்க ளோடும் பின்னிப் பிணைந்துள்ள உருத்திரபுரம் கிராமத்தின் மூத்த குடிகளில் ஒன்றாகிய ச.மு. குடும்பம் என்று அழைக்கப்படும் திரு. திருமதி முருகேசு தம்பதிகளின் மூத்த மகனான அருளம்பலம் ஆசிரியரின் துணைவியாக எமது ஊரைப் புகுந்த வீடாக்கி தனது ஆசிரியப் பணியை உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் மேற்கொண்டவர் திருமதி ஞானசௌந்தரி அருளம்பலம்.

அருளம்பலம் ரீச்சர் என்று அழைக்கப்படும் ஆசிரியையின் கம்பீரமான தோற்றம், கனிவான பேச்சு, சிரித்த முகம். அதில் அழகிய பெருந்தில கம். உடையில் நேர்த்தி என்பன மாணவர்களைக் கவர்ந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என் பதற்கு இணங்க எண்ணையும் எழுத்தையும் ஆடல் பாடலுடன் அற்புத மாகப் போதித்தார். அன்னையைப் போல் அன்பாக அரவணைத்து மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதில் அவருக்கு நிகர் அவரேதான். இவை மட்டுமன்றி அவர்கள் சார்ந்த சமூகத்தின் பண்பாடுகள், விழுமியங்கள் என்பவற்றைப் பாதுகாக்கக் கூடிய நற்பிரஜைகளை உருவாக்குவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் 50)

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய வாழ்ந்து காட்டியவர்.

ஆசிரியரது சேவை பாடசாலையோடு மட்டும் நின்றுவிடாது கிராமத்து மக்களோடும் தொடர்ந்தது. ஆசிரியரது குடும்பம் பாடசாலை ஆசிரிய விடுதியில் தங்கியிருந்த காலத்தில் கிராமத்தில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. ஆசிரிய விடுதிக் கிணற்றில் நீர் இருந்தது. அச்சுற்றாடலில் உள்ள மக்கள் அனைவரும் விடுதிக் கிணற்றைப் பாவிப்பதற்கு அனுமதி யளித்ததோடு மட்டுமல்லாது சகல உதவிகளையும் இன்முகத்துடன் செய்வார். இதன் காரணமாக ஆசிரியருக்கும் மக்களுக்குமான உறவு இன்னமும் நெருக்கமானது. இதற்குச் சான்றாக எனது தம்பி வெளி நாடு செல்லப் பணம் தேவைப்பட்ட போது ஆசிரியர் எங்களுக்கு உதவி செய்தார். இன்று நாங்கள் வசதியாக இருக்கிறோம் என்றால் அதற்கு ஆசிரியரும் ஒரு காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை மட்டுமல்ல அவர்களது குடும்ப உறவினர்களும் உதவி களைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். அருளம்பலம் ஆசிரியர் அவர்கள் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் இருநூறு (200) தென் னம்பிள்ளைகளை நாட்டிப் பராமரித்து வருவது எமது பாடசாலைக்குப் பெருஞ் சொத்தாக அமைந்துள்ளது.

இவர்களது அர்ப்பணிப்பான சேவையின் விளைவுதான் இவர்களது செல்வங்களான ஜெயசீலன், ஜெயக்குமார், ஜெயஸ்ரீ ஆகியோர் வாழ் வின் உயர்ந்த நிலைக்குக் காரணம் என்பது வெள்ளிடை மலை.

ஆசிரியர் பாடசாலை, சமூகம் மட்டுமல்லாது வீட்டிலேயும் குடும்பத் தலைவிக்குரிய வேலைகள் அனைத்தையும் செய்வார். எந்நேரமும் சுறுசுறுப்புடன் காணப்படுவார். எந்நேரமும் வேலை செய்துகொண்டு தான் இருப்பார். நினைக்கும் போது நிறைவாக வாழ்ந்துள்ளார் என எண்ணுகிறேன். “நேற்று இருந்தோர் இன்றில்லை” இதுதான் உலக நியதி.

ஆசிரியரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளின் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

**திருமதி விக்னேஸ்வரி குலஞானசுந்தரம்**
ஆசிரியை
இல. 52, D-10, உருத்திரபுரம்.
(14.06.2022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா ஆசிரியப் பெருந்தகை

வயலும் வயல்சார்ந்த கிராமம் சிவநகர். அங்கு ஓர் அழகிய பாடசாலை சிவநகர் அ.த.க. பாடசாலை. எனது ஆரம்பக் கல்வியை அப்பாடசாலையில் தொடங்கினேன்.அக்காலத்தில் என் மனங்கவர்ந்த ஆசிரியை அருளம்பலம் ரீச்சர். உயரமான தோற்றமும் கம்பீரமான நடையும் நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டும் இன்றும் என் கண் முன்னே நிழலாடுகிறது. கண்டிப்புடன் அன்பும் கலந்து கல்வி புகட்டிய அந்த ஆசிரியை எனது ஆரம்பக் கல்விக்கு சிறந்த ஆணிவேர். அவரது தோற்றம் மாணவர் மனங்களில் பயத்தை உருவாக்கும். ஆனால் அந்த தோற்றத்தினுள்ளும் அழகிய ஒரு நல் மனம் இருக்கும் என்பது யாருக்கும் இலகுவில் புரியாது.

வறுமைப் புயலில் சிக்கிய மாணவர் சமூகம் கல்வி கற்ற அப்பாடசாலையில் யாரையுமே புறக்கணிக்காது அரவணைத்து கல்வி புகட்டிய பெருமை அவரையே சாரும். அருளம்பலம் ரீச்சர் பாடசாலையில் ஆசிரியர் மட்டுமன்றி பிரதி அதிபராகவும் விளங்கி பாடசாலையை நெறிப்படுத்தியவர். அவருடைய மகள் ஜெயஸ்ரீ எம்முடன் ஒன்றாகப் படித்தவர். எனக்கும் அவருக்கும் நெருங்கிய உறவிருந்தது. எனது வீடு பாடசாலைக்கு முன்னால் என்பதால் பாடசாலைக்கும் எனக்கும் நெருங்கிய உறவு. அருளம்பலம் ரீச்சரும் எனது குடும்பத்தில் ஒருவராகவே இருந்தார். அவர் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர். இது பலருக்கும் தெரியாது. ஏன், எனக்கே அவர் இறந்த பின்னரே தெரிய வந்தது. ஏனெனில் அவர் பாடசாலையில் இந்துமத நிகழ்வுகள் அனைத்தையும் முன்னின்று நடத்தியவர்.

அருளம்பலம் ரீச்சர் இன்றும் எம் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். மாணவர் மனங்கவர்ந்த ஆசிரியை என்ற வகையில் எனது மனதில் மட்டுமன்றி பல மாணவர் மனங்களிலும் அருளம்பலம் ரீச்சர் நிறைந்திருப்பார். எனது ஆசான் ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஓம் சாந்தி!

*கிராம அலுவலர்*
**சாரதாம்பாள் சுந்தரலிங்கம்**
*திருவையாறு, கிளிநொச்சி*
*(13.06.2022)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகுருவாகத் திகழ்ந்த நல்லாசிரியை ஞானசௌந்தரி

மறக்க முடியுமா? உங்கள் நினைவுகளை.நிமிர்ந்த நடையும், நேரிய பார்வையும், சிரித்த முகமும், குடைபிடித்து பாடசாலை செல்லும் பாங்கும், ஆளுமைத்திறனும் ஆங்கிலப் புலமையும் கொண்ட எங்கள் குரு திருமதி ஞானசௌந்தரி அருளம்பலம் அவர்கள் என் மனதைத் தொட்ட வாழ்நாள் ஆசிரியை. செல்லமாக அருளம்பலம் ரீச்சர் என்றும் அழைப்பது என் மனதில் ஆழப்பதிந்த நினைவுகள். அடிப்படை வசதிகளற்ற காலத்திலும் எமது கிராமப் பாடசாலையான உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாக பணியாற்றி தொடர்ந்து சிவநகர் அ.த.க பாடசாலையிலும் நீண்ட காலமாக உப அதிபராகவும் பணி யாற்றி ஓய்வுநிலை ஆசிரியராக எம்மண்ணில் வாழ்ந்துள்ளார்.

அவரின் நற்பண்புகளாக சாந்தமான முகம், அமைதியான சுபாவம் என்பவை நான் அவரிடம் கண்டவையாகும். தம் பிள்ளைகள் கல்வி யிலும் வளம்பெற்று வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் சிறப்பாகச் சேவை புரிந்து வாழ்கின்றனர். ஆரிசியரின் அன்பான கணவர் அருளம் பலம் மாஸ்ரர் மற்றும் பிள்ளைகள் மண்பற்று, மொழிப்பற்று மிக்கதாக வாழ்கின்றனர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் **50**, இல்வாழ்க்கை)

எனும் வள்ளுவரின் வாக்கிற்கமைய வாழ்ந்து காட்டியவர். தாம் மட்டு மல்ல தம்மையும் சூழவுள்ள அனைவரையும் கல்விப் புலத்தினால் வளப்படுத்தி மண்ணையும் மக்களையும் நேசித்த சிறந்த ஆசிரியை எங்கள் அருளம்பலம் ரீச்சர். "சான்றோர் சாவதில்லை. அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் அவர்களை என்றும் வாழ வைக்கின்றன." எனும் சான்றோர் வாக்கிற்கமையவும், ஆன்மா அழியாது, கூறுபோட முடியாது, என்பதற்கமைய ஆசிரியை அருளம்பலம் ரீச்சர் அவர்களின் நினைவு என்றும் நிலைத்திருக்கும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

என்ற பிரார்த்தனையுடன் மாணவன்
**முத்துராசா கமலக்கண்ணன்**
(ஆசிரியர்) உருத்திரபுரம், கிளிநொச்சி (**12.06.2022**)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை அடிக்கடி கூறிய பொன் மொழிகள்.

01 ஆறின கஞ்சி பழங் கஞ்சி.

02. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.

03. ஒரு கை கொடுப்பது மறு கைக்குத் தெரியக்கூடாது.

04. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
கூழானாலும் குளித்துக் குடி.

05. ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.

06. கொடுத்தார்க்குக் குறைவில்லை.

07. ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்பான்.

08. கண்டதைக் கற்பவன் பண்டிதன் ஆவான்.

09. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேச வேண்டும்.

10. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

11. குட்டக் குட்ட குனிபவனும் முட்டாள். குனியக் குனியக் குட்டுப வனும் முட்டாள்.

12. செய்வன திருந்தச் செய்.

# புலம் பெயர்ந்த குழந்தைகளுக்கு அம்மா அடிக்கடி கூறும் ஒரு உண்மை கதை.

எமது தமிழ்க் குடும்பங்கள் சில ஒரு குடும்ப விழாவுக்கு சிங்கப்பூர் சென்றார்களாம். அங்கு சென்ற குழந்தைகள் வெவ்வேறு மொழிகளை முதல் மொழியாகக் கொண்டவர்கள். அனைத்துக் குழந்தைகளுமே தமிழைப் பாலமாகக் கொண்டு பேசினார்களாம். பிரான்சில் இருந்து சென்ற ஒரு குழந்தை மட்டும் அங்கு தங்கிய நாட்களில் சைகை மொழியில் பேசிக் கொண்டதாம். பின்னர் பிரான்ஸ் திரும்பிச் சென்று அந்தக் குழந்தை எமது அம்மா கற்பித்த தமிழ்ப் பாடசாலையில் தமிழ் படிக்க ஆரம்பித்ததாம். ஆகவே "தமிழ் படியுங்கோ பிள்ளைகள், எங்கின்று வாழ்ந்தாலும் தமிழ்தான் உறவாடல் மொழி" என்று தான் காண்கின்ற குழந்தைகளுக்கு எமது அம்மா அறிவுரை கூறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாடல்

பேரப் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல. அவர் சந்தித்த பெரும்பாலான குழந் தைகளுக்கு இந்தப் பாடலை அழகிய ஆடல் அபிநயத்தோடு சொல்லிக் கொடுப்பார்.

*கியாங் கியாங் குருவி நானே*
*கியாங் கியாங் கீ –2*

*தென்னை மரமே தென்னை மரமே சிறிய குருவி நான் –2*
*மழை காலம் தங்குவதற்கு இடம் தருவாயா – 2*
*சின்னஞ்சிறிய குருவியே நான் இடம் தரமாட்டேன் – 2*

*கியாங் கியாங் குருவி நானே*
*கியாங் கியாங் கீ – 2*

*வாழைமரமே வாழைமரமே சிறிய குருவி நான் – 2*
*மழைகாலம் தங்குவதற்கு இடம் தருவாயா –2*
*சின்னஞ்சிறிய குருவியே நான் இடம் தரமாட்டேன் – 2*

*கியாங் கியாங் குருவி நானே*
*கியாங் கியாங் கீ –2*

*ஆலமரமே ஆலமரமே சிறிய குருவி நான்–2*
*மழைகாலம் தங்குவதற்கு இடம் தருவாயா –2*
*சின்னஞ்சிறிய குருவியே நான் இடம் தரமாட்டேன் – 2*

*கியாங் கியாங் குருவி நானே*
*கியாங் கியாங் கீ –2*

*மழைகாலம் காற்றும் மழையும் வீசி அடித்தது–2*
*தென்னை மரமும் வாழை மரமும் மாறி விழுந்தன –2*
*ஆலமரம் அசையாமல் நிமிர்ந்து நின்றது–2*

*கியாங் கியாங் குருவி நானே*
*கியாங் கியாங் கீ –2*

*நீதி:*
“நன்மை செய்தால் நன்மை விளையும்”.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் இயற்றித் தன் கைப்பட எழுதிய சிறுவர் பாடல்

பொங்கல் இன்று பொங்கல்
புது வருடப் பொங்கல்
மங்கலங்கள் பொங்க
மக்களிடம் பொங்கல்

தைத்திருநாளில் வரும்
இனிய தைப் பொங்கல்
தமிழர் துயர் நீங்கிடவே
பொங்கிடும் தைப் பொங்கல்

பானையிலே வைத்து
பால் வடியும் வேளை
அரிசி வெல்லம் தனையிட்டு
பொங்கிடும் தைப் பொங்கல்

விரும்பிய கனி படைத்து
களித்திடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கல் உண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்

சேர்ஜி, பிரான்சு
*(1997)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தனது இறுதி மூச்சு நிற்கும் தருணம் வரை கேட்ட இயேசுவின் பாடல்

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்
தேடுங்கள் கிடைக்கும் என்றார்
இயேசு தேடுங்கள் கிடைக்குமென்றார் – 3

பெத்லகேம் நகரில் மாட்டு தொழுவமதில் பிறந்தார் பரமபிதா
சூசை கன்னி மரியின் மடியில் தவழ்ந்தார் இயேசு பிதா
ஆறு வயதினில் ஆரம்ப பள்ளியில் கல்வி பயின்றாரே
ஆகமங்கள் ஐம்பத்தாறினையும் ஐயம் தீர உணர்ந்தார்
இயற்கை உலகமே தூய்மையானதென இயேசு நினைத்தாரே
எல்லா உயிர்களும் தன்னுயிர் எனவே பேசி மகிழ்ந்தாரே
(கேளுங்கள்)

ஜெருசலேம் நகரில் பஸ்கா பண்டிகைக்கு பரமர் போனாரே
பனிரெண்டு வயது நிரம்பிய இயேசு கேள்விகள் கேட்டாரே
இயேசுவின் கேள்வியில் ஆலய குருக்கள் ஆனந்தமானரே
இளமை செய்த திறமையில் பஸ்கா பெருமையை வளர்த்தாரே
இளமைப் பருவமதில் எளிமை வாழ்க்கையில் இருப்பிடமானாரே
இந்த வேளையில் இயேசுவின் தந்தை சூசையும் மறைந்தாரே

தந்தையார் செய்த தச்சு தொழிலையே தனையனும் செய்தாரே
தங்க உழவர்கள் உழுதிடக் கலப்பைகள் செய்து கொடுத்தாரே
தங்க உழவர்கள் உழுதிடக்
கலப்பைகள் செய்து கொடுத்தாரே
(கேளுங்கள்)

நிலங்களை உழுவது போல்
உள்ளத்தை உழுங்கள் என்று
உலக பிதா சொன்னபோது
உழவர்கள் தொழிலாளர் ஊராரின்
எண்ணமதில் இயேசு ஒன்றாகந் பதிந்து விட்டார்
இயேசு ஒன்றாகப் பதிந்து விட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக் குழந்தைகள் அருகில் இருப்பதே
ஆண்டவன் தொண்டு என்றார்
இயேசு ஆண்டவன் தொண்டு என்றார்

(கேளுங்கள்)

முப்பதாம் வயதில் யோர்தான் ஆற்றங் கரையினில் சென்றாரே
யோவான் என்ற ஞானியின் அன்பால் நோன்புகள் ஏற்றாரே
ஞானஸ்நானமும் பெற்றாரே
துன்பத்தை அகற்றி இன்பமாய் வாழ வழி பல சொன்னாரே
இயேசு நண்பனாம் யூதாஸ் நன்றி மறந்து காட்டிக் கொடுத்தானே
முப்பது காசுக்காகவே காட்டிக் கொடுத்தானே

(கேளுங்கள்)

ஜனகரீம் என்ற நீதிமன்றத்தில் இயேசு நின்றாரே
தெய்வ நிந்தனை செய்பவர் என்ற பழியைச் சுமந்தாரே
சிவப்பு அங்கியால் இயேசுவை மூடிச் சவுக்கால் அடித்தாரே
இயேசுவை சிலுவையில் அறைந்தாரே

மரித்த இயேசுவும் மூன்றாம் நாளிலே உயிரோடு எழுந்தாரே
பனிரெண்டு சீடர் நடுவில் தோன்றி ஆசிகள் அளித்தாரே
உலகத்தின் முடிவில் மறுபடி தோன்றி நம்மையும் காப்பாரே

(கேளுங்கள் 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறவா நினைவுகளில்
# நேசம் நிறைந்த நல்லாசிரியை

ஊரும் உறவுமாய்
வேரும் விழுதுமாய்
பாரெலாம் போற்றும்
பண்பெழில் குடும்பமிது
நீரெல்லாம் சூழ்ந்த
இலங்கைத் தீவின்
இலங்கு முதல் தீவு நெடுந்தீவாகும்
இராமேஸ்வரத்திற்கு
பசும் பால் ஈந்த தீவு
பால்த்தீவு பசுந்தீவு
பார்புகழ் மூலிகைத் தீவு
இத்தீவின் தோன்றலர்கள்
விளக்கு புகழ் வேளாளர்
அத்தீவை விட்டகன்று
விரைந்தனர் கிளிநொச்சி
வேளாண்மை செய்திடவே
பற்றோடு பாசம்
பலமிகுந்த மனிதரிவர்
சுற்றங்கள் சேர்ந்து

காடழித்து மேடழித்து
கரடி புலி யானை கண்டு
பாடுபட்டுழைத்தனர்
பண்பாட்டு முறைகளுடன்
கூட்டாகி குவலயத்தில்
வேளாண்மை செய்துயர்ந்த
வேளாண் மன்னர்
போராடி இம்மண்ணைப் பொன்னதாக்கி
பொலிகின்ற விளைபூமியென
ஆக்கிவைத்தார்
ஏராளர் சீராளர் (சானாமூனா)
முருகேசர் முதன்மை மாந்தன்
உருத்திரபுரமே போற்றும் உன்னத இல்லமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துடன் வாழ்ந்து கமத்தொழில் புரிந்து
விருப்புடன் நன்கு விருந்துகளோம்பி
பெரும் புகழோடு வாழ்ந்தனர் வையம்
முருகேசு என்னும் நாமங் கொண்டு

முறையுடன் அழகிய மீனாட்சியம்மையை
திருமணம் செய்து தித்திக்கும் வாழ்வினில்
ஈராறு மழலைகள் பேறாய்க் கொண்டனர்
பேறு பதினாறும் பெற்றிடு முதல் மைந்தனாய்
அருமைச் செல்வன் அருளம்பலமென
அவதரித்துயர்ந்தார்
இப்பெருங்காவில் இனிய நல் மாந்தன்
ஒப்பிலாப் பண்பினன் ஓர்ந்திடும் அறிவினன்
தப்பிலாப் பணிகளில் தர்மம் வளர்ப்பவர்
ஆசான் அதிபராய் அரும்பணி யாற்றினார்
அந்நாளிதனில் அழகுடை நங்கை
அருந்தவப் பெண்ணாள்

ஞான சௌவுந்தரி மனமது கவர்ந்தார்
தேனமுதான காதலில் திளைத்து
திருமண சொர்க்கம் கண்டு மகிழ்ந்தனர்

இருவரும் இல்லற வாழ்வினில் இன்பமாய்
இணைந்தே சேவைகள் இங்கெலா மாற்றினர்
பெருவரமாக பிள்ளைகள் மூன்று
முத்தெனப் பிறந்தனர்
திக்கெலாம் சென்று திறம்படக் கல்வியை
பக்குவமாக ஊட்டி வளர்த்தனர்
தக்க சேவையில் தம்மை அர்ப்பணித்தனர்
பக்கபலமாய் ஒருவருக்கொருவர்
கருத்தொருமித்துக் கடமையாற்றினர்

சிக்கல் பற்பல வந்த போதிலும்
சினங் கொண்டிடாச் சிந்தையில் சிறந்தனர்
இப்பெருநாளில் காலச்சூழலின்
கடும்போக்கதனால்
இம்மண்விட்டு புலம் பெயர்ந்தனர்
புலம் பெயர்ந்தாலும் நிலம் மறவாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம் வந்தனர் வளம் பலசெய்தனர்
நலமுடன் நற்பணி நாட்டுக்காற்றினர்
இலயெனச் சொல்லி இருந்ததேயில்லை
குலமது காத்திட குறைவிலா துழைத்தனர்

பலமுடன் பணிகள் பாரெலா மாற்றினர்
தலங்கள் பள்ளிகள் தர்மச்சாலைகள்
நிலம்படு வறுமை நிலையினை உணர்ந்து
நித்தம் உதவிகள் செய்திடு மாண்பினர்

அருளும் பலம் ஆசிரியை நாமம் பூண்டு
இருளகற்ற இங்கினிய கிராமம் யாவும்
வருத்தமது பாராது பணிகளாற்றும்
பெருந்தவமாய் அமைந்திட்ட அன்பின் ஊற்று
கருமமதே கண்ணாக கடமையாற்றி
கலைகள் பல கற்பித்த ஞானச்செல்வி
ஒருமனதாய் அனைவரையும்
அணைத்து வாழ்ந்த
அரும்பணியின் அன்னையிவர்
அணையாத் தீபம்
பெருமைபெறு பேறுபெற்ற
பெருந்தகமை மனிதநேயம்
நிமிர்ந்தநடை நெஞ்சுறுதி
நேர்மையது நேர்கொண்ட பார்வை
கவர்ந்திடு நல்புன்சிரிப்பு கருணையன்பு

காலத்தால் அழியாத கலையின் ஞானி
ஞாலமிது போற்றுமுயர் சகலகலா
வித்தகியாள்
சாதனைகள் பலபுரிந்த தமிழாசிரியை

அகம் வேறு முகம் வேறென்றில்லாது
அனைவரையும் அன்பாலே அணைத்து தியாகம்

சுகமற்றுக் கிடந்திட்ட பொழுதில் கூட
சுகநலங்கள் விசாரிக்கும் பண்பின் தெய்வம்
இகமிதனில் இவரின் பணி மறந்திடாது
இதயமெலாம் வாழ்த்தியிங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்கள் கூப்பும்
யுகமிதனில் சாதி மதம் இனம் பாராது
அகந்திறந்து ஆற்றிய நற்பணிகள் நூறாய்

இவரன்பில் வளர்ந்திங்கு
அறிவுபெற்ற
ஆசிரியப் பெருந்தகைகள் பல நூறாகும்
அறிவு திறன் மனப்பாங்கமைந்த ஆசான்
நெறிமுறைகள் பிசகாக நேர்மைத் தாயாள்
குறி தவறாக் குறிக்கோளே வாழ்வதாக
வறிய பல மாணவர்க்கு வரமாய் வாய்த்து
பொறியாகி அறிவொளியை
ஏற்றி நின்ற
அறிவினொளி வழிகாட்டி
ஆசிரியை அணையாத்தீபம்
நெஞ்சம் மறவா நினைவுகளில்
நேசம் நிறைந்த நல்லாசிரியை

அத்தனை பேரையும் அறிவாளியாக்கிய ஆளுமை
வித்தகி இவரின் வியத்தகு
ஆற்றல் விளங்கிடவைத்தது பலரை
சத்தியம் நேர்மை சார்பிலாத் தன்மை
உத்தமியிவரின் உடன்பிறப்பு
நித்தமும் நிலத்தில் நிறைந்திடு
உழைப்பைத் தந்திடு சோலைகளாக்கி
சத்திடு தோட்டம் சகலருக்குதவும்
சங்கதி சொல்லிடு தாயாள்

மெத்தப் படித்து மேதினிவாழும்
சொத்திவள் ஜெயசிறிதன்னை
வித்தகியாக்கி விளங்கிட வைத்திட்ட
ஆற்றல்
பற்றுடன் தமிழில் பற்பல தொண்டில்
பட்டங்கள் பெற்றிட்ட மாது
நற்பணியாளன் மருத்துவமாந்தன் (மருமகன்)
சதானந்தன் துணையெனவானார்

முற்றத்து மல்லிகை பூத்துக் குலுங்கிட
நற்றமிழ் பற்றினில் வளர்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றநல் மக்கள் ஜெயசீலன் ஜெயக்குமார்
கற்றவர் இருவரும் வாழ்வினில்
உயர்ந்திடு வர்த்தகரானார்

பற்றுடன் மண்ணில் பற்பல சேவை
உற்ற நல்வேளையில் உதவி
பெற்றவர் மனதைப் பெருமைப் படுத்தி
நற்துணை தேர்ந்தனர் மண்ணில்
நலம் பெற்று வாழ்கிறார் வையம்பெற்றிடு தவமாய் பெருந்தகை
சத்தியகௌரி மற்றவர் மாண்புறு
மயூரா மருமக்களாகி
மகிமைபெற்றிடு இல்லம்
உற்றிடு உயர்வினில் வாழ்வோர்
உற்றவர் உறவினர் ஊரேலாம் போற்ற
நற்பணி நாயகி மறைந்தார்
கற்றவர் கதற கணவர் கண்மலர் பொழிய
பெற்ற பிள்ளைகள் பேதலித்தலற
பற்றுடன் பாச மருமக்கள் பதற
பேரப்பிள்ளைகள் பெருமூச்சாக
உற்ற உறவுகள் உயிர் மூச்செறிய
உடன் பிறந்தோரும் உடன்பிறவாதோரும்
உளமதுநோக
மைத்துனர் மைத்துனி அத்தனை பேரும் அலறித் துடித்திட
உத்தமி வானில் சங்கமித்தாரே
அத்தனை பேரும் அஞ்சலித்து மலர் தூவ
இத்தரை நீத்து நீள்துயிலானார்
மண்ணில்

இனிய பா எழுதி தமிழோடு
வாழ்ந்தவருக்கு
இரங்கற் பா எழுதுவதா....?
கனிந்த தமிழைக் கைப்பிடித்து நடந்தவருக்கு
கடைசியாக கண்ணீரில் எழுதுவதா...?
மனதுக்குள் மல்லிகை போல் நறுமணங்கள்
மலர்ந்து கொண்டேயிருக்கிறது ஞாபகங்கள்

முத்தமிழாய் பூத்த எழிலே
மூத்த தமிழை போற்றி பாடும் அழகே
காத்த தமிழோடு வாழ்ந்த பிறையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடம் அழகாக சென்றதனோ உறவே......!
எத்தனை எத்தனை பேருக்கு
அறிவின் விளக்கை ஏற்றினீர்கள்
அத்தனை அத்தனை பேரையும்
அகிலத்துக்கு வழிகாட்டியாக மாற்றினீர்கள்
எல்லோரும் தொடமுடியா உயரத்திலே
இன்று நீங்கள் விடைபெறுகையில்
எல்லோரும் துயரத்திலே.....!

உருத்திரபுரம் தொட்டு உலகபுரம் எல்லாம் உம் பெயர் சொல்லுமே....!
உறவுகள் நட்புகள் ஞாபகங்கள் மனதை கிள்ளுமே....!
அந்த வசந்த கால நினைவுகள்
உணர்வை மீறி துள்ளுமே.... இன்று
உங்கள் பிரிவால் கண்ணீர் வெள்ளமே....!

வாழ்வை அழகாக வாழ்ந்து
வாழ்க்கையை கற்பித்த வள்ளலே
வாழும் இடம் எல்லாம் தமிழை போதித்து
வளம் பெற வைத்த வாசலே
பொதிகை போல் மனையை அமைத்து
குற்றாலமாக்கிய செம்மலே
இனி இப்பிறப்பில் காண்பது எப்போது உம்மையே.....!

ஊரையும் உறவுகளையும் அழகாக்கிய
பெரும் வரமே....!
உன்னதமான சேவை செய்து
அரும்புகழ் சேர்த்த அதிசயமே...!
வாழும் உறவுகள் எல்லாம் வணங்கி தொழுகிறோம்- மீண்டும்
எங்கள் தோப்பில் தமிழாய் பிறந்து வலம் வர
வேண்டுகிறோம்

ஓம் சாந்தி!

அருளம்பலம் முருகேசு அவர்களின்
ஒன்றுவிட்ட தாய்மாமன் மகன்
**கந்தையா கலா கணேசன்**
உருத்திரபுரம், கிளிநொச்சி *(20.06.22)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்திகள்

முகநூலிலும், சமூக வலைத்தளங்களிலும் அம்மையாரின் துயர் கேட்டு 800 க்கும் அதிகமான எமது உறவுகள் இரங்கல் செய்திகளை அனுப்பி இருந்தார்கள். அதில் சில அஞ்சலிகள் இவை.

kalai aunty
எங்கள் அன்புக்குரிய சகோதரி/
நண்பி அவர்களின் தயாரின்
இழப்பு செய்தி கேட்டு மிகுந்த
கவலை கொண்டுள்ளோம்.
துயரமான இவ்வேளையில்
ஜெயஸ்ரீயை நாங்கள் பக்கம்
இருந்து தேற்ற
முடியவில்லையே ! என்ற
கவலையோடு அம்மாவின்
சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம். 08:05

Kamala Teacher London
ஆசானாக அன்னையாக
ஆற்றிய பணிகள் அற்புதம்.
உருத்திரபுரத்தின்
மருமகளாய் வந்து அந்த
மக்களுடன்
ஒட்டி உறவாடி இன்ப
துன்பங்களில்
பங்கேற்று வாழ்ந்த எம் உறவு
எங்கள் ,ஜெசின்
அம்மா,சானாமுனா
குடும்பத்தின் மூத்த மருமள்.
அருளம்பலம் அண்ணரின்
(மாஸ்ரர்)
அன்பு மனைவி எத்தனை
எத்தனை
பெருமைகளை எம் ஊர்ருக்குத்
தந்த
ஆசிரியரின் துயரச் செய்தி
மிகவும்
துன்பத்தைத் தருகிறது.
நியதிகளை யாரல் மாற்ற
முடியும்.
ஜெசி ஆறம்மா. ஆழ்ந்த
அனுதாபங்கள்.அன்னைக்கு
நிகர்

முல்லைநாச்சியார்
கண்ணீர் அஞ்சலி!

தமிழ்ப்பட்டறை இலக்கியப்
பேரவையின்
பன்னாட்டுக்கிளை -
இங்கிலாந்துக்கான
ஒருங்கிணைப்பாளரிகளில்
ஒருவரும், மரபு வகுப்பின்
பயிலுனருமான திருமதி
ஜெயஸ்ரீ சதானந்தன்
அவர்களின் தாயார் இயற்கை
எய்தியுள்ளார் என்பதை
வருத்தத்துடன்
அறியத்தருகிறேன்.

ஜெயஸ்ரீ க்கும்,
குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

அம்மையாரின் ஆன்மா
சாந்தியடைய அனைவரும்
பிரார்த்திப்போம்.
. 12:13

Kamala Teacher London
Sara Swathi Baskar Teacher
கண்ணீருடன் ஆழ்ந்த
இரங்கல்



நம்மூரின் நாயகியே சென்று
வாருங்கள் ஆத்மா சாந்தியடயப்
பிரார்த்திக்கின்றோம்.ஆசிரிய
ராய், அம்மாவாய், குடும்பப்
பெண்ணாய்
ஆற்றிய சேவைகள் உங்கள்
நினைவாக வாழ்ந்து
கொண்டிருக்கும்.
ஓம் சாந்தி 12:47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Raji London

அன்னையைப் போல் ஒரு
தெய்வமில்லை
அவர் அன்புக்கு நிகர்
யாருமில்லை
பழகியதை, பகிர்ந்ததை,
பராமரித்ததை, பந்தி பந்தியாகச்
சொன்னாலும் தீராது............
கேள்விப்பட்ட நேரத்திலிருந்து
கவலையாக உள்ளது ஜெசி,
கண நேரத்தில் கவர்ந்து சென்று
விட்டான் காலனவன்
காலமெலாம் நினைத்து
அழுவதற்கு,
ஜெசி, தேற்றுவதற்கு அருகில்
நாமில்லை என வருந்துகிறேன்
அப்பா, அண்ணாவர்களுக்கும்
ஆறுதல் சொல்லுங்கள்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!! 18:39

Praba Sellathurai

ஆழ்ந்த அனுதாபங்கள், ஆத்ம
சாந்திக்கு இறைவனை
வேண்டுகிறோம் , " அருளம்பலம்
ரீச்சர்" ஆரம்ப காலங்களில்
எழுத்தறிவித்தவர், அம்மாவைப்
பிரிந்து அழுது கொண்டு
பாடசாலை வரும் சிறார்களுக்கு
தாயாய் இருந்து தாலாட்டு
பாடியவர்

Sara Swathi Baskar Teacher

ஒரு துயரமான செய்தி .
நம்முடைய தோழமைக்
கவிஞரும் என் மரபு
மாணாக்கருமாகிய ஜெயஸ்ரீ
சதானந்தன் அவர்களின் அன்பு
அம்மா இறைவனடி சேர்ந்து
விட்டார்கள் என்பதைக்
கண்ணீருடனும் மிகுந்த
வருத்தத்துடனும் பதிவு
செய்கிறேன் . அம்மாவின்
ஆன்மா சாந்தி அடையவும் ,
அன்னையை இழந்து வாடும்
ஜெயஸ்ரீ சதானந்தன்
குடும்பத்தார்க்கு இழப்பினைத்
தாங்கும் மனத்தினை இறைவன்
தந்தருள எல்லாம் வல்ல
இறைவனிடம் இறைஞ்சுவோம் .
😭😭😭😭😭 10:10

Sivaa Meena

ஆசானாய் அன்னையாய்
நிழல் தந்த விருட்சமே !
உங்களின் அமைதிக்குள்
எத்தனை ஆளுமைகள் !
பார்த்து ரசித்த அழகிய
பெட்டகமே !
சிதறாத வார்த்தைகள் !
கலையாத அலங்காரம் ,
நேர்த்தியான உடை
நிலம் நோகாத நடை
நிறைவான புன்னகை
அப்பப்போ 'ஆசிரியர் விடுதியில்
எமக்களித்த உணவுகள்
எல்லாமே
நினைவாக மீட்டிய வேளை
புன்னகையால் பொலிந்த
உங்களின் முகம் .சிறுமியாக
இருந்தும் இத்தனை
நினைவுகளையும் தந்த கற்பக
தருவே !
ஆசிரியம் என்பதை அழகாக்கி
எனைப்போன்றோரை
உருவாக்கிய அற்புதமே !
சென்று வாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Shaan Shaka**
இறைவனடி சேர்ந்த அம்மா
இறைவனின் சன்நிதியில்
இன்பமாக உறங்குவார்.
ஆழ்ந்த இரங்கல்கள்

அம்மா விட்டுச்சென்ற நற்
படிப்பினைகளைக்
கடைப்பிடித்து அவர் வாழ்வைப்
புனிதமாக்குவோம்

நினைவுகள் இருப்பின்
பிரிவுகள் நிரந்தரம் இல்லை

**Sivaa Meena**
என் நேசத்திற்குரிய ஆசான் !
இளமைக்கால அழகு தேவதை!
முன்மாதியாக முன்னிருத்திய
நல்லுள்ளம் !
அறுசுவை ஊட்டிய அன்னை !
வெஞ்சினம் காட்டாத ஆசான் !
ஆசிரியத்தை அழகாக்கிய
அற்புதமே !
மண் வாசனை மறக்காத
மாதாவே!
என்னவெல்லாமோ எழுத
ஏவுகின்றதே மனது ,
எப்படித்தான் மறப்போம்
உங்களை ???
சென்றுவாருங்கள் தாயே .
இவள்,
உங்கள் பிரியமான மாணவி

**Siva Thiru**
எமது
ஊரானதெல்லிப்பழையில்
பெரிதாகபழகாவிட்டாலும்
உருத்திரபுரத்தில் இவர்
ஆசிரியராக இருந்தகாலத்தில்
இவருடன் பழகும்
வாய்ப்புகிட்டியதுடன்.பின்னர்
இவரது உறவுகளுடன்
நெருங்கிபழகும்காலத்தில்இவ
ருடன்
பழகும்வாய்ப்புகிட்டியது.நல்ல
அன்பான சுபாபம்
கொண்டவர்.இரக்கமானவர்
தன்குடும்பத்திலும்
ஏனையவர்களிலும்
பாசம்வைத்துபழகியவர்.இவரது
இழப்பு
ஈடுசெய்யமுடியாதது.ஆழ்ந்த
அனுதாபங்களைத்தெரிவித்துக்
கொள்ளுகின்றோம்.ஆத்மாசாந்
திபெறுவதாக.குடும்பத்தினர்
ஆறுதலடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

(வீமன்காமம்,தெல்லிப்பளை)
றப்பியல் + தெய்வானைப்பிள்ளை

சீனியர்
வெலிச்சோர்
சின்னத்தங்கம்
பார்வதி
தம்பியையா
வல்லிபுரம்
நாராயணபிள்ளை
சந்தியாப்பிள்ளை
திரேசம்மாள்
**கிளாறம்மா**
(வீமன்காமம்,தெல்லிப்பளை)

(கரவெட்டி)
இன்னாசிப்பிள்ளை + ஆனாசி

வெலிச்சோர்
மரியம்பு
பெனடிக்பிள்ளை
(கரவெட்டி) **மத்தியாஸ்** + **கிளாறம்மா**
மேரி றீற்றா
ஞானசவுந்தரி
பூரணம்
தயாபரம்
நேசராணி
கமலம்

சடையர்முருகேசு + மீனாட்சி

**அருளம்பலம்**
(அமரர்) தம்பிமுத்து
(அமரர்) மார்க்கண்டு
(அமரர்) கோபாலபிள்ளை
(அமரர்) சரஸ்வதி
(பிரான்ஸ்) செல்லம்மா
(உருத்திரபுரம்) மங்கையற்கரசி
(அமரர்) சண்முகரத்தினம்
(பிரான்ஸ்) சரவணபவன்
(பிரான்ஸ்) தர்மரட்ணம்
(வவுனியா) லோகநாதன்
(வவுனியா) கோகுலகௌரி

(அமரர்) லோறன்ஸ்
(அமரர்) தேவசகாயம்
**ஞானசவுந்தரி** + **அருளம்பலம்**
(யாழ்ப்பாணம்) ரோசாமலர்
(பிரான்ஸ்) அகிநேசம்
(வவுனியா) இராசேந்திரம்
(பிரான்ஸ்) அன்ரன் ஜெகநாதன்

ஜெயசீலன்
+
சத்தியகௌரி
|
சேயோன்
(கொவன்றி, இங்கிலாந்து)

ஜெயக்குமார்
+
மயூரா
|
அட்சயன், ஆதித்தன்
ஆரணன்
(சேர்ஜி, பிரான்ஸ்)

ஜெயஸ்ரீ
+
சதானந்தன்
|
இலக்கியா, ஓவியன்
(றக்பி, இங்கிலாந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் குடும்ப விருட்சமாய், நம் வாழ்வின் வழிகாட்டியாய் என்றும் எம்மோடு வாழ்ந்து, எம்மை எல்லாம் மீளாத் துயரில் விட்டுச் சென்ற எம் உயிர்த் தெய்வம் திருமதி. அருளம்பலம் ஞானசவுந்தரி அவர்களின் பிரிவுத் துயர் அறிந்து வீட்டிற்கு வருகை தந்தோருக்கும், தொலைபேசியிலும், முகநூலிலும், சமூக வலைத் தளங்களிலும் இரங்கல் தெரிவித்த அனைத்துள்ளங்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட அனைத்து உறவுகளுக்கும், இறுதிக்கிரியையில் நமக்குப் பல வழிகளில் உதவி செய்த நண்பர்கள், அயலவர்கள், உற்றார், உறவினர்களுக்கும், இறுதி நேரத்தில் பல்வேறு உதவிகளைச் செய்த கிளிநொச்சி வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக் கும், சகல சமய அனுஸ்டானங்களோடு இறுதி நிகழ்வைச் செய்த சென்.பற்றிமா தேவாலய உறுப்பினர்களுக்கும், இந்த மலரினை அழகுற அமைத்து உதவிய திரு. பிரதீபன் அவர்களுக்கும், இம் மலரினை அச்சுப் பதித்துத் தந்த அச்சகத்தார் அவர்களுக்கும், இன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்ட அனை வருக்கும், அத்தனை பெரும் நல் உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வ நன்றியோடு உங்கள் கைகளை இறுகப் பற்றிக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

இங்ஙனம்
**குடும்பத்தினர்**
உருத்திரபுரம், கிளிநொச்சி
*08.07.2022*

தலைவர்
திட்டக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருபது வயதில் ஞானசௌந்தரியின் அழகிய தோற்றம்
(தெல்லிப்பளை – 1957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைக் கல்விப் பகுதி
ஆசிரியர் அடையாளம்

ஆசிரியர் அடையாளச் சான்றிதழ் (கொழும்புத்துறை - *1957*)



*25* வயதில் அன்னையின் தோற்றம் (தெல்லிப்பளை- *1962*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*1981* இல் எடுக்கப்பட்ட எம் குடும்பப் புகைப்படம் (கொழும்பு)



*1983 காலப் பகுதியில்... (கிளிநொச்சி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1984 காலங்களில் உருத்திரபுரத்தில்
தன் பிள்ளைகளுடன் பாடசாலை செல்லும் போது



தனது தாயாருடனும் பிள்ளைகளுடனும் (தெல்லிப்பளை - 1984)



தனது சின்ன மகனுடன் சிரித்து விளையாடும் போது (தெல்லிப்பளை - 1984)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவுகளோடு பிரான்சில் (பாரீஸ் - 1992)



உறவுகளோடு பிரித்தானியாவில் (நியூகாஸ்ரல் - 1997)



பிரான்சில், மொழி படிக்கும் மாணவர்களோடு (பொபினி - 1995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்சில் தன்துணைவருடன் (1995)



பிரித்தானியாவில் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளோடு (ரக்பி - 2017)



கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் (உருத்திரபுரம், கிளிநொச்சி- 2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருளம்பலம் ஞானசௌந்தரி
25.07.1937 - 13.05.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org